
திரைக்கதை வசனம்.
பதிப்பகம்
மு.க

# மனோகரா

திரைக்கதை வசனம்

மு. கருணாநிதி

பூம்புகார் பதிப்பகம்

1/1 ஜக்கரியா காலனி 2-வது தெரு,

சென்னை-24

உரிமை: ஆசிரியருக்கே.

முதற்பதிப்பு: பிப்ரவரி 1954.

விலை எட்டணா

Bharat Devi Press, 2/16, Mount Road, Madras-2.

# நாடகக் கதை

வீரன், மனோகரன் குலகுரு நிர்ணயித்த லக்னத்திலே பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கப் புறப்பட்டு தாய் பத்மாவதியிடமும், மனைவி விஜயா விடமும் விடை பெறுகிருன். அவன் தந்தையை வசப்படுத்தியுள்ள வசந்தசேனை, போரில் மனோகரன் இறந்து விட்டான் என்று பத்மாவிடம் ஒரு செய்தியைச் சொல்லி அவள் உயிரைப் போக்கிவிட்டால், தானே மகாராணியாகி விடலாம் எனக் கருதி பௌத்தாயனன் என்பவனை அதற்கு ஏற்பாடு செய்கிருள். பௌத்தாயனன் பத்மாவதியிடம் மனோகரன் இறந்து விட்டதாகச் சொல்லும்போது மனோகரன் வந்து விடுகிருன். பௌத்தாயனன் மன்னிக்கப்படுகிருன். வசந்தசேனையின் சூழ்ச்சியைக் கண்டு ஆத்திரமடைந்த மனோகரனை தாய் பத்மாவதி தடுக்கிருள். மனோகரனை இளவரசனுக்க அரசர் தீர்மானிக்கிருர். அன்றைய தினம் கொலுமண்டபத்துக்கு வந்த ராஜகுரு, அரசன் பக்கத்தில் வசந்தசேனை இருப்பதைக் கண்டு ஆத்திரமடைகிருர். மனோகரனும் சீறிப் பாய்கிருன். தாயின் சத்யத்தால் அமைதி அடைகிருன். வசந்த விழாவில் வசந்தசேனை மனோகரனை வேசி மகன் என்கிருள். அரசருக்கே வசந்தா மீது கோபம் வருகிறது. வசந்த விழா சம்பவம் பற்றி கேட்டு பத்மாவதி, சத்யசீலர் எனும் அமைச்சருக்குக் கடிதம் எழுதுகிருள். அந்த கடிதத்தை மாற்றி அரசர் மனதை வசந்தசேனை குழப்பி விடுகிருள். அரசருக்கு பத்மாவதி மீது சந்தேகம் பிறந்து, சத்யசீலரை விட்டே மனோகரனை கொல்ல ஆணையிடுகிருர். சத்யசீலர் தவிக்கிருர். மனோகரன் காரணம் கேட்க சபைக்கு போகிருன் அவனை சங்கிலியால் கட்டிவர மன்னர் உத்திரவிடுகிருர். சபையில் நடந்த வாக்குவாதத்தில் மனோகரன் தந்தையைக் கொல்லப் பாயும்போது பத்மாவதி ஓடிவந்து தடுத்து விடுகிருள். மனோகரனை கொல்வதற்கு கொண்டு செல்கிருர்கள்.

மகனைத் தடுத்து தன்னைக்காப்பாற்றிய தன் மனைவியின் பண்பைப் பற்றி அரசன் சிந்தித்து மனம் மாறுகிறான். மனோகரனும் சத்யசீலரும் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு உயிர்விடப் போகும்சமயம் அரசர், ஒற்றன் உருவத்தில்சென்று முத்திரை மோதிரத்தைக் காட்டி அரச கட்டளையை திரும்பப் பெற்று விட்டதாக அறிவித்து அவர்களை காப்பாற்றி மறைகிறார். மனோகரனும், சத்யசீலரும், தோழன் ராஜப்ரியனும், மாறு வேடத்தில் நகருக்குள் வராமல் இருக்கிறார்கள். மனோகரனுக்கு நகர் திரும்ப பிரியமில்லை. அரசர் பத்மாவதியிடம் போய் கடிதத்தால் ஏற்பட்ட தவறுதலான எண்ணங்களுக்கு சரியானவிளக்கம் பெற்று இருவரும் ஆனந்தமடைகிறார்கள். கடிதத்தை மாற்றி பத்மாவுக்கு களங்கம் கற்பிக்க தான் செய்த சூழ்ச்சி அரசனுக்கு தெரிந்துவிட்டதால் அரசனையே கொன்றுவிட வசந்தசேனை எண்ணுகிறாள்.

அவளால் கொல்லப்பட்டு அடிக்கடி வந்து பயமுறுத்தும் அவளது இறந்துபோன புருஷன் கேசரிவர்மனின் ஆவி அப்போதும் வந்து பயமுறுத்துகிறது. அன்றிரவு வசந்தசேனையின் மகன் பைத்யக்கார வசந்தன் அரச உடை போட்டுக்கொண்டு அந்தப் பக்கம் வருகிறான். அரசன் என நினைத்து தன் மகனை கொன்று விடுகிறாள், வசந்தசேனை மகன் போய்விட்ட கவலையில் தானும் தற்கொலை செய்து கொள்கிறாள். பாண்டிய நாட்டுக்கும் அரசன் புருஷோத்தமருக்கும் போர் மூள்கிறது புருஷோத்தமருக்கு தோல்வி ஏற்படும் நிலையில் மாறுவேடத்திலிருக்கும் மனோகரன் போரில் தலையிட்டு சோழநாட்டுக்கு வெற்றி உண்டாக்குகிறான் பிறகு புருஷோத்தம ராஜர் மனோகரனை உணர்ந்து எல்லோரும் இன்பமாக வாழ்கிறார்கள்.

★

# முன்னுரை

---

நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் அவர்களின் தலை சிறந்த நாடகம் **'மனோகரா'** அதை திரைப்படமாகத் தயாரிக்கும் பெரும் பொறுப்பை யேற்று வெற்றி பெற்றிருக்கிறார் திரு **எம். சோமசுந்தரம்** அவர்கள். படத்தின் திரைக்கதை வசனம் தோழர் மு. கருணாநிதியால் தீட்டப்பட்டது. அதை நூல் வடிவாகத் தொகுத்தோம். அது இது!

பதிப்பகத்தார்.

# மனோஹரா

---

## திரைக்கதை வசனம்

★

(குகை உட்புறம் அரூபம் ஒரு சிலையை செதுக்கிக்கொண்டிருக்கிறது அதன் எதிரே புன்னகையுடன்.)

பெரியவர் : வெற்றி...வேதனையைப் பொருட்படுத்தாதவனுக்குக் கிடைத்த வெகுமானம்!...அநேக வருஷங்களாக பட்ட பாட்டிற்கு சரியான அறுவடை! இனி நினைத்ததை யெல்லாம் செய்து முடிப்பேன்...கேசரி வர்மா! கவலைகள் படிந்த உன் கண்களிலே களிப்பு பொங்கட்டும். துயர மேகங்கள் உன்னை விட்டுத் தூர ஓடட்டும். தொல்லைகள், இனி நமக்குத் தூசுகள்..... ஹ ... ஹ ... ஹ ... வெற்றி ; வெற்றி ;

கேசரி வர்மன் குரல்மட்டும் கேட்கிறது. சிற்றுளியும் சுத்தியும் தங்கள் வேலையை நடத்திக்கொண்டே யிருக்கின்றன.

கேசரி வர்மன் ; குருதேவா! உண்மைதானா? நான் தெரியவில்லையா உங்கள் கண்களுக்கு! ......

பெரி : ஆமாம் கேசரி வர்மா! அரூபமாகிவிட்டாய். கண்டு பிடித்த மருந்து வேலை செய்யத் துவங்கிவிட்டது. கிடைக்காதது கிடைத்துவிட்டது. என் ஆராய்ச்சிக்கு அமோக வெற்றி. எல்லோரையும் நீ பார்க்கலாம். ஆனால் உன்னை யாரும் பார்க்க முடியாது.

கேசரி : குருதேவா!...பதின்மூன்று வருடங்கள்...பதறிக் கிடந்தேன் அந்தப் பாவியைப் பழிவாங்க வேண்டுமென்று! பாதை வகுத்துக் கொடுத்து விட்டீர்கள்

ளிப்போது! ......சுவாமி! அரூபம் அதிக நாழி இருக்காதா?......

பெரி: இருக்காது - ஆனால் இன்னும் முயன்று பார்க்கலாம். நான் தேடும் மூலிகைகள் கிடைத்துவிட்டால் அரூபமாக மட்டுமல்ல, அழியாமலே கூட இருக்கலாம். ஆனால் கேசரிவர்மா! நல்லவர் வாழ இதைப் பயன்படுத்து!

கேசரி: நல்லவர் வாழப் பயன்படுத்துவேன்! அதே சமயத்தில் இந்த நாசகாரியின் நரி வேலைகளை அம்பலமாக்குவேன். பாவி! பழிகாரி........................
கணவனுக்கு விஷங் கொடுத்த பத்திரகாளி! உன் விஷத்தால் செத்துவிடவில்லையடி. கேசரி வர்மன்! இருக்கிறான் உயிரோடு! சாகவில்லை — சாகமாட்டான், உன் சதியை வெளிப்படுத்தாமல்!
வஞ்சகி!......வாய் ஜாலக்காரி!

பெரிய: ஹ ஹ ஹ ..............

கேசரி: குருஜி.

பெரி: சிலையப்பா அது!

கேசரி: சிலை தான்! ஏன் செதுக்கினேன் இவளை! சித்திர வதை செய்வதற்கு ஒத்திகை பார்க்க; வசந்த சேனை! உன் விழியில் வேல் சொருகுவேன் - கூந்தலுக்கு தீ மூட்டுவேன்-கொவ்வை உதடுகள்!..அவைகளில் கூறிய ஊசிகளைக் குத்துவேன் ...... கண்ணாடிக் கன்னம்! ஹ ஹ ஹ ........ கட்டாரியால் கிழிப்பேன் ...காண்பவர் வெறி கொள்ளும் மேனி...கண்டம் கண்டமாக வெட்டி எறிவேன்! ஆரம்பமாகிவிட்டதடி, அரூபத்தின் அற்புத வேலைகள்! ... மாயக்காரி, தொடங்கி விட்டதடி உன் மாஜி கணவனின்பழிவாங்கும் படலம். நடமாடும் பாம்பே! ... நாசத்தின் நர்த்தனமே! நய வஞ்சகப் பிசாசே...சிரிக்கும் சிலந்தியே ........

*   *   *

வசந்த சேனையின் சிரிப்புடன் அரண்மனையில் காட்சி ஆரம்பமாகிறது.

**வசந்தசேனை :** பைத்யக்காரி! இப்போது நினைத்தாலும் நான் பட்டமகிஷி, ஆக முடியுமடி! ......

**தோழி :** அதுதாம்மா எனக்கும் ஆசை. ஆனால் மகாராணியும், இளவரசரும் உயிரோடு இருக்கும்போது ...

**வச :** மகாராணி—இளவரசர்... இரண்டும் உயிர்ப்பிணங்கள் நான் சிரித்தால் போதும், சிம்மாசனமே கிடைக்கும். மயக்குகின்ற ஒரு பார்வை – இந்த மண்டலமே என் காலடியில்! மகாராஜாவின் பிரேமை ராணியடி நான்! நினைத்தால் போதும் – வசந்த சேனை ராணி! அவள் மகன் வசந்தன் இளவரசன்!

* * *

மாளிகையின் ஒரு பகுதியில்

**வசந்தன் :** ஆமாமாம் சந்தேகமில்லை விகடா! ராஜா மகன் இளவரசன்! இதிலே எனக்கு சந்தேகமில்லை ...

**விகடன் :** வசந்தா! இதிலேமட்டுமா நமக்கு சந்தேகமில்லை...எந்த நாளிலும் எதிலும் நமக்கு எள்ளளவாகிலும் உள்ளபடிக்கு ஒரு சந்தேகமில்லை.

(வசந்தன் ; விகடன் சந்தேகமில்லை பாட்டு)

* * *

அரண்மனையின் மற்றொரு புறத்தில்
பத்மாவதி: (அரசர் படத்துக்கு முன்பு)

**சுவாமி!** நாமிருவரும் இனிமேல் ஒன்று சேரும் நாளே வராதா ...? என் வாழ்க்கையிலே நான யாருக்கும் எந்த தீங்கும் செய்தது கிடையாதே! என் வாழ்க்கையைக் கெடுத்த வசந்த சேனையைக்கூட மன்னித்து இருக்கிறேன் ... அவளிடம் வாஞ்சை மிகுந்த உங்களுக்கு வருத்தம் வரக்கூடாது என்பதற்காக! .. அப்படியே நான் யாருக்காவது தீமை செய்திருந்தாலும் அதற்கு பல ஆண்டு காலம் தங்களைப் பிரிந்து வாடுகிறேனே! இந்த தண்டனை போதாதா? சுவாமி கண்மணி மனோகரனின் பிறந்த நாளும் வருகிறது. எழில் பூத்த நம் செல்வத்தை இருவரும் உச்சி மோந்து அன்பு வாழ்த்து கூறுவோமே – அந்த இன்ப நாள் இனிமேல் வரவே முடியாதா சுவாமி!

(குகையின் உட்புறம்)

பெரியவர் : எங்கே கேசரி வர்மா அவசரமாகப் புறப்படு கிருய் ?

கேசரி வர்மன் : நாடகத்திற்கு — அதோ அவர்களைத்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

பெரி : மறந்துவிட்டேன். இன்று மனேகரன் பிறந்த விழாவா? உம் ... நாடகத்திற்கு என்ன பெயா வைத் திருக்கிருய் ?

கேசரி : போர்வாள்.

பெரி : சபர்ஷ் ... தடையொன்றும் கிடையாதே நடத்து வதற்கு ? ...

கேச: கிடையாது. காரணம், கதை அவர்களுக்குப் புரி யாது ...

பெரி : வசந்த சேனைக்கு உன் நாடகத்துப் புனைப்பெயர் என்ன ?

கேச : தேவ சேனு !

பெரி : உன் பெயர் ?

கேச : ஈஸ்வரி வர்மன். புருஷோத்தமனை உத்தம புருஷ னென்று மாற்றியிருக்கிறேன்.

பெரி : கட்டாயம் புரிந்துகொள்வார்கள் கதையை.

கேச : புரியத்தானே வேண்டும். அப்போதர்வது புரு ஷோத்தமனுக்கு புத்தி வராதா ?

பெரி : உம் ... முயற்சி செய்து பார் !

கேச : வருகிறேன், குரு தேவா !

பெரி : ஜாக்ரதை

* * *

(அரண்மனை. வசந்தசேனை முத்தாரத்தி லுள்ள பதக்கத்துள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உக்ரசேனன் படத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிருள். )

தோழி : என்னம்மா ... தினம் தினம் எதை மறந்தாலும் இதை மறப்பதில்லை நீங்கள்? அப்படியென்ன இந்தப் பதக்கத்தில் கண்ணை இழுக்கும் காந்தம் இருக்கிறது?

வச : காந்தமில்லையடி! ஆபத்தில் கை கொடுக்கும் கடவுள்!

தோ : கடவுளா?

வச : பாரேன் ... (படத்தை காட்டுகிருள்)

தோ : அம்மா, மகாராஜா! வருகிருர்.

புருஷோத்தமன் : இன்னுமா முடியவில்லை, அலங்காரம்? நேரமாகிவிட்டதே நாடகத்துக்கு ...

வசந் : இதோ முடிந்துவிட்டது.

புரு : மறந்துவிட்டாயா, இன்று மனோகரன் பிறந்தநாள்.

வசந் : மறப்பேனு, செல்வன் பிறந்த நாளை; எனக்கு வேறு ஒரு நினைவு வந்தது ...

புருஷோத் : எது? வசந்தி!

வசந் : நமது காதல் விழாவின் பதின்மூன்ருவது ஆண்டு..

புருஷோத் : ஆமாம் கண்ணே ... வருடங்கள் ஓடியதே தெரியவில்லை.

[வந்துகொண்டே வசந்தாவைத் தொடுகிருன்]

வசந்தன் : நெருப்பைத் தொடாதே! சுட்டுவிடும் - தேளை கொஞ்சாதே கொட்டிவிடும் - இதிலெல்லாம் எனக்கு சந்தேகமில்லை... சந்தேகமில்லை... எப்படியம்மா இன்னைக்கு புதுப்பாடம்? எம்மா!...அடே...அப்பா! அம்மா அழகைப் பாருப்பா...எனக்கும் அம்மாவைப்போல ஒரு பெண்ணு கிடைச்சா ...

வசந் : சீ ... பேசாமலிரு!

வசந்தன் : பிள்ளையாரு மாத்திரம் கேட்டாரே, அவுங்க அம்மா பார்வதியைப் போல பெண்ணு! நாங் கேட்டா என்னப்பா ...

புருஷோத் : தீரவே தீராது இது!

வசந்தன் : சந்தேகமில்லை.

புருஷோத் : வசந்தி, நான் போகிறேன் ... சீக்கிரம் புறப்படு ...

(மனோகரன் மாளிகையில்)

* * *

சத்யசீலர் : வஞ்சகம் வாழ்ந்தது கிடையாது...கொடுமை நிலைத்ததில்லை...இதைக் கேள் ! விழா உன் பொருட்டு நடைபெறுகிறது... விழாவுக்கு நீ வந்துதான் தீர வேண்டும்...

மனோ ; என்பொருட்டு விழா நடைபெறுகிறது. மனப்பூர்வமாகவா ? இல்லை... சம்பிரதாயத்திற்கு !

சத் ; தவறு மனோகரா ! புத்திர வாஞ்சையற்றவரல்ல புருஷோத்தமர்.

மனோ ; உங்களுடைய ஆசை, அந்த வாஞ்சையும் அற்றுவிடக்கூடாதென்று ! ஆனால் அப்பா அணு அணுவாக விஷமாக்கப்படுகிறார்.

சத் : எப்படியானாலும் சரி, ராஜ குடும்பத்திலே தகாறு இப்படி பிறர் பேசக்கூடாது.

மனோ ; உயர்ந்த எண்ணம் ! ஆனால் அந்த ஊர் கெடுப்பவளுக்கு உதயமாகியிருக்க வேண்டும்.

'சத் : மனோகரா ! உன்னுடைய பிறந்தநாள்... அதிலே நீ இல்லையென்றால்.

ராஜப்ரியன் : அரசர் கவலைப்பட மாட்டார்... அந்த ஆனந்தவல்லி, அருகிலே இருக்கும்போது !

சத் : உம்... இருவருமே இளைஞர்கள். துடிக்கிறீர்கள் !

மனோ ; அமைதி கற்பிப்பது விவேகிகளின் பண்புதான் ! ஆனால் ஆமைபோல் அடங்கிக் கிடப்பது வீரர்களின் பண்பல்ல ! அந்த மயக்கு மொழிக்காரியும் வருவாள்; அங்கே என் மாதாவும் வரவேண்டும், முடியாது ! என்னால் அதைக் காண முடியாது !

பத்மாவதி : மனோகரா !

மனோ : அம்மா !...

பத்: செல்வா... கேட்டுக்கொண்டுதான் வந்தேன்! ராஜப்ரியன் கூட சீறி விழுந்தானே. ஏன்? மந்திரியாரே... மனோகரன் கட்டாயம் நாடகத்துக்கு வருவான்...

(மனோகரன் மௌனியாகிறான்)

* * *

(அரண்மனையில் நாடகம், கேசரிவர்மன் திரைக்குப்—பின்னாலிருந்து பேசுகிறான்)

; கற்பனைக் கதையல்ல நீங்கள் காணப்போவது சிந்தனைச் சித்திரம். சிங்காரியால் சீரழியும் ஓர் சாம்ராஜ்ய சரித்திரம்!

; வேந்தன் உத்தம புருஷன் ஒரு செந்தமிழ்ச் சோலை.

: அவன் சிந்தை குளிப்பாட்டிய தென்றல் கமலாவதி, பட்டத்தரசி!

; பட்டத்தரசியின் தந்தையை பாண்டியன் கொன்றான். சிந்தை குலுங்கும் செய்தி ஏந்தி வந்தான் ஒரு சைத்ரிகன், ஈசுவரி வர்மன்!

: அவன் மனைவி தேவசேனா ஒரு சித்ராங்கி.

; தென்றல் போல வந்தாள்.

: புயலாக மாறினாள். அந்தப் புன்சிரிப்புப் புயல் புகுந்த கட்டம்...

(நாடகம் துவங்குகிறது)

கமலாவதி: அப்பா!... அப்பா...!

உத்தம புருஷன்: அழாதே கமலா அழாதே! வர்மா; மாமா தமது அந்திய காலத்தில் சொல்லிய செய்தி ஏதாவது?...

ஈஸ்வரி வர்மன்; இருக்கிறது ப்ரபூ...

; "என் பேரன் அஜயன்தான் பாண்டியன் மீது பழி தீர்த்துக்கொள்ளவேண்டும். என் நவரத்ன சிங்காதனத்தை மீட்பதும் அவன் பொறுப்புதான்.

இந்த பழி தீர்க்கும் பாரம் ராஜா உத்தம புரு ஷனுக்கு கிடையாதென்பதையும் திட்டமாக கமலா வதிக்கு தெரிவித்து விடு...

: மகாராஜாவிற்கு என் மனப்பூர்வமான ஆசீர் வாதம் ''—இதுதான் மஹாராணி, தங்களுக்குத் தங்கள் பிதா கூறிய செய்தி... கடைசியாக இந்த வாளை தங்களிடம் கொடுக்கச் சொல்லியதும் மஹா ராஜாவின் உயிர் அமைதியாகப் பிரிந்து விட்டது,

உத் : அப்பா......!

கம ; அப்பா......?

அஜயன் : அம்மா......!

கம ; அஜே......!

அஜ ; ஏம்மா அழறே!

கம ; இல்லேடா கண்ணு. அஜயா உன தாததாவை-க் கொன்ற அந்த பாண்டியனை......

அஜ : கொடம்மா கத்தி......

: அவன் தலையை இப்பவே வெட்டி கொண்டா றேன்.

கம : ஆம் அதில் சந்தேகமே இல்லையடா

: பெரியவனானதும் நீ நிச்சயமாய் செய்வாய்...!

(நாடகம் பார்த்துக்கொண்டிருக்கும் பத்மாவதி பக்கத்திலிருக்கும் மனோ கரன்மீது கைவைக்கிறாள்.)

மனோ : என்னம்மா...?

பத் : ஒன்றுமில்லையடா கண்ணே! நாடகம்...

(நாடகத்தில்)

வர்மன் : அப்போது எனக்கு விடை!

உத் : வர்மரே! நீர் நமது அரண்மனையிலேயே தலைமைச் சைத்திரியராக இருக்கவேண்டும்.

வர் : என் பாக்யம் ப்ரபூ!

கம : உன் மனைவிக்கு இஷ்டமிருந்தால் அவள் என்னிடமே பணிப் பெண்ணாக இருக்கலாம்.

வர் : எங்கள் பாக்கியம் தாயே !

தேவசேனை ; (தனக்குள்) பணிப்பெண் நான். பாராளும் மகாராணி இவள் ! நாளை காலம் மாறினால்... !

(நாடகம் பார்த்துக்கொண்டிருக்கும் விகடன்.)

; அம்மா ! அம்ம ! இவ பலே ஆள் தான் !...

சத்யசீலர் : இப்படித்தான் ஒரு சைத்ரீகன் வந்தான் அரண்மனைக்கு... பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு...

ராஜப்பிரியன் : அவன் பெயர் ?

சத் : கேசரி வர்மன் !

(நாடகத்தில் தேவசேனை அரசன் உத்தம புருஷன் மயங்கும்படி நடனமாடுகிறாள். அரசன் ஒரு முத்துமாலையைப் பரிசாகத் தருகிறான்.)

(தேவசேனையிடம்)

வர்மன் : உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி ! நமது நாட்டு கலாமந்திரத்தை உத்தேசித்து தக்ஷிணப் பிரதேசம் முழுவதும் நான் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டி இருக்கிறது. அது மகாராஜாவின் ஆக்ஞை !

தேவசேனை : எனக்கு அது சந்தோஷச் செய்தி ! ஹூம் ! அட ஈஸ்வரா !

வர்மன் : அவசரம்தானே கூடாது... உன்னையும்தான் அழைத்துப் போகப் போகிறேன்......

சேனை : நிஜந்தானா அத்தான்...... இப்பத்தான் நீங்கள் என் பொன்னத்தான் !... அப்பா !... கூண்டுக் கிளி மாதிரி இதுவரை காலம் தள்ளி வந்தேன்... அத்தான் இதோ... மஹாராணியிடம் உத்தரவு கேட்டு வந்து விடுகிறேன்.

(சொல்லியபடி கீழே விழுகிறாள்)

சேனை : ஆ !......

தோழி : அம்மா !... அம்மா !...... சொன்ன கேட்டாத் தானே !......

வர்மன் : சேன !

தோழி : மறுபடியும் மயக்கம் வந்திடுச்சுங்களா ?......

வர்மன் : அப்போது இதற்கு முன்பும் ?......

தோழி : என்னங்க எஜமான்... தெரியாத மாதிரி பேச றீங்க. அம்மா !... இன்னும் ஒன்பது மாசத்திலே ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகுது

வர்மன் : ஆஹா... சேன கர்ப்பிணி.

நாடகம் பார்க்கும் ராஜப்பிரியன் : அப்படியானல் வசந் தன் யார் மகன் ?

சத்யசீலர் : நாடகத்தைப் பார் !

ராஜப் : நாடகமா ? நடந்ததா ?

நாடகத்தின் அடுத்த காட்சியாக அர சன் உத்தம புருஷனும் தேவசேனவும் காதல்பாட்டு (நிலாவிலே ! சல்லா பமே ! ! பாடுகின்றனர்.)

கமலாவதி : உம்...நகரசோதனை இன்று சீக்கிரத்தில் முடியவில்லை போலிருக்கிறது.........

ராஜா : ஆம்...ஆம்...நேரம்தான் ஆகிவிட்டது...வழியில் எதிர்பாராத ஒரு வேடிக்கை......

கமலாவதி : வேடிக்கையாகத்தானிருக்கிறது உங்கள் பேச்சும்...இங்கு நான் விழித்துக்கொண்டிருப்பதுகூட உங்களுக்கு எதிர்பாராத ஒரு வேடிக்கையாகத்தான் இருக்கிறது...ஸ்வாமி......நகரசோதனைக்கா இந்த நாகரீக உடைகள் ?... நல்ல வாசனை !...ஜவ்வாதுப் பொட்டு !...ஓ !...மாப்பிள்ளை மணவறையிலிருந்து இப்போது தான் திரும்புகிறீர்கள போலிருக்கிறது... தங்களின் புது மணமகள் யார்தான் ஸ்வாமி ?...

ராஜா : நாவை அடக்கிப் பேசு...போ அப்புறம்—

கமலா : உங்களை இவ்வளவு கேவலமாகவா மாற்றி விட்டது. அந்த சண்டாளியின் சகவாசம்.

(ராஜா கமலாவதியை கன்னத்தில் அறைகிறார்.)

கமலா : மகாராஜா! தர்க்க நியாய வாதங்களுக்குப் புறம்பாக தான்தோன்றி முறையில் பேசி அகாரணமாக என்னை அடித்து புண்படுத்திவிட்ட உங்களை நான் இனிப்பார்க்கத் தயாராக இல்லை. உங்களைக் காணவும் என் கண் கூசுகிறது. வேசி தேவசேனையின் நேசத்தின் வேகம் தணிந்தபின் தாங்களாக வந்து என்னைப் பார்த்தாலொழிய நானாக வந்து தங்களை பார்க்க மாட்டேன் என்பதையும் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மகாராணி கமலாவதிக்கு உங்கள் புதிய ரதிதேவியின் அழகில்லாமலிருக்கலாம்.

: ஆனால் அவளின் இந்த மஞ்சள் கயிற்றுக்கு ஒரு தனி மகிமை உண்டென்பதைமட்டும் உணரும் காலம் உங்கள் வாழ்க்கையிலே ஒருநாள் நிச்சயம் வந்தே தீரும். போய்வாருங்கள், உங்கள் புண்ணிய சேவைக்கு! போங்கள்.

ராஜா : நீ சொல்லவேண்டாம்! நானே போய்க்கொண்டு தான் இருக்கிறேன்.

தேவசேனை தோழியிடம்.

சேனை : இந்தப் புள்ளிதான் அடையாளம்... இதில் போடு விஷத்தை. பத்ரம்......

நாடகம் பார்க்கும் வசந்தசேனை:

மகாராஜா! இனிமேல் என்னால் இருக்கமுடியாது... உள்ளம் கொதிக்கிறது.

நாடக தேவசேனை : அத்தான்...சூடான பால்...தலைவலி பறந்துவிடும்.........

வர்மன் : சேனை கர்மக் கள்ளிகள் தங்கள் கணவன்மார்களுக்கும் பாலில் விஷம் கலந்து கொடுப்பார்களாம். நீ கேள்விப்பட்டிருக்கிறாயோ......

சேனை : இல்லையத்தான்...ஆனால் இந்தப் பாலில் அப்படியொன்றுமில்லை.........

**வர்மன் :** நீ சொல்லும்போது எனக்கென்ன பயம்? சேனு இப்படி வா...... என் கையால் உனக்குப் பாலைக் கொடுத்து ரொம்ப காலமாயிற்றல்லவா?........

**சேனு :** ஆமாம்...அதெல்லாம் கலியாண புதிதில்...

**வர்மன் :** சீ...அப்படிச் சொல்லாதே...குடி...

**சேனு :** தேவாமிர்தமாயிருக்கிறதத்தான்!......

**வர்மன் :** சரி...அதைக் கொடு. நானே குடிக்கிறேன்.

**சேனு :** ஏனும்...நானதான் கொடுப்பேன்...உம்...

நாடகம் பார்க்கும் வசந்தன் :

வேண்டாம்! வேண்டாம் விஷம்!"

**சேனு :** ஹா ஹா ஹா...விஷம் வேலை செய்கிறதாக்கும்... புத்திசாலிகளின் போக்கே இப்படித்தான்......

**வர்மன் :** அடீ...ராக்ஷஸீ!...சோரம் செய்தது போதாதென்று சொந்தப் புருஷனையும் மருந்திட்டுக் கொல்லுகிறாய்? ஆ........

**சேனு :** உன்னால் நான்பட்ட துன்பங்கள் ஒன்று, இரண்டா? என் உயிர்க் காதலன் ருத்ரசேனனிடமிருந்து என்னைப் பிரித்தாய்? இப்போது என் கருத்து பூத்துக் காய்த்து கனியாகும் நிலைமையிலிருக்கிறது...உன்னை உயிரோடு வைத்திருந்தால் வேரையல்லவோ வெட்டிப் போடுவாய்? அதனால்தான் நான் முந்திக்கொண்டு விட்டேன்...உன் தலைவிதியைத் தடுக்க யாரால்தான் முடியும்? மனைவியின் மனதறிந்து நடக்கத் தெரியாத மடையன்களுக்கெல்லாம் இதே கதிதான் எந்தக் காலத்திலும்......

வர்மன் சாகிறான், நாடகம் காணும் வசந்தசேனை கூச்சலிடுகிறாள் நிறுத்தச் சொல்லி!

(ஒலி கேட்கிறது) கணவனைக் கொன்றாள்! காட்டாற்றில் உருட்டினாள்...

காதகீ! இன்னும் உயிர் வாழ்கிருள்!
இன்னும் உயிர் வாழ்கிருள்.

* * *

[வசந்தசேனை அந்தப்புரம். வசந்தசேனை ஆத்திரமுடன் எழுந்து உலவுகிருள்... வீரர் இருவர் வருதல்......

வசந்தி : எங்கே...நாடகக் கும்பல்?

வீரன் : விரட்டிக் கொண்டே போனேம். தப்பிவிட்டார்கள்......

வச : தைரியசாலிகள்! வெட்கமில்லே. சீ ஓடுங்கள்......

தோழி : ஏம்மா...நாடகக்காரர்கள ;

வச : ஆங்?......பரிசு கொடுக்க!......

தோழி : கொடுக்க வேண்டியது தாம்மா...நம்மை காட்டி கொடுக்கிற கதையா இருந்தாலும் நடிப்பு நல்லா யிருந்தது!

வச : சீ...என்னடி விமர்சனம்...போடி! உம்!

(தனக்குள்) நாடகம்...என்னை வைத்து எழுதப்பட்டது! கேசரி வர்மன் உயிரோடு...சேச்சே, பிணம் பிழைப்பதாவது...ஒரு வேளை...விஷம் சரியாக வேலை செய்யாமல்......

(அரசர் வருகிருர்.)

வச : ப்ரபூ!

(அசட்டு சிரிப்புடன் அரசன் உட்காருதல்.)

வச : வழக்கமான புன்சிரிப்பு இல்லை...வாட்டத்தோடு இருக்கிறீர்கள்...என்ன காரணம், ஸ்வாமி?......

அர! ஒன்றுமில்லை...

வச : பிறகேன், கண்ணே என்ற கனிமொழி உதிரவில்லை? கண்களிலே கலக்கம்...கண்ணளா! பால்!...

அர; பாலா?...

வச : ஏன், ஓகோ ! நாடகம் நினைவுக்கு வந்துவிட்டதோ...

அர : அதெல்லாமில்லை...

வச : பெருமூச்சால் பேசுவானேன் என்னையே கேளுங்கள் என் கணவர் கேசரி வர்மன்...நம் காதலை காண சகிக்காமல் ஊரைவிட்டு ஓடிவிட்டார் என்று தங்களிடம் சொல்லியிருந்தேன்...

அர : ஆமாம்! இப்போது ? ? ?

வச : நஞ்சு கொடுத்துத் தன் கணவனைக் கொல்லுகிறாள் நாடக தேவசேனை ! தாங்களும் அதை உண்மையென்று நம்பி......

இரண்டு கிண்ணங்களையும் கையில் எடுத்துக் கொண்டு..."இதில், எதை வேண்டுமானாலும் தாங்கள்..."

அர : வேண்டாம்...நீயே கொடு...

வச : இல்லை தாங்கள் விரும்புவதை எடுத்துக் கொள்ளுங்கள். சந்தேகம் ஒரு சங்கடமான நோய். காதல் வாழ்வை துண்டாக்கும் கட்டாரி...அது வீரரையும் கோழையாக்கும்...உம், எடுத்துக் கொள்ளுங்கள்... (பிறகு யோசித்து)... அதுகூடவேண்டாம்... நானே இரண்டையும் சாப்பிடுகிறேன்.

(ஆச்சரியமாய்)......

வசந்தி : என்னை மன்னித்துவிடுங்கள் மகாராஜா ? பதின் மூன்று ஆண்டுகளாக தங்கள் பத்தினியாக வாழ்ந்தேன் - அதை வைத்துக் கேட்கிறேன். ஆபரணம்- ஆடம்பரவாழ்வு-அரச போகம்- போதும்... தாருங்கள் தயவு செய்து...காஷாய உடை ! கையிலே ஒரு ஓடு ! மறுக்காதீர்கள். போக விடை கொடுங்கள்......

அர : போவதா......நீயா ?......எங்கே கண்ணே......

வச : உலகம் மிகப் பெரியது. பிரபு ! அதன் ஜனக் கூட்டத்திலே நானும் ஒரு துளியாகி விடுகிறேன் - தங்கள் பெயரை ஜபித்துக்கொண்டு என் ஜன்மத்தை கழித்துவிடுகிறேன்.

வச : உங்கள் காலடியில் கிடக்கும் என் இன்ப வாழ்வுக்கு தீ மூட்டத் திட்டம் போட்டு விட்டார்கள் !

அர : திட்டம் ? யார் ?

வச : மகாராணி தான் !

அர ; யார்...பத்மாவதியா ?......

கேசரியின் குரல் : இல்லை...பச்சைப் புனுகு ?...பாராளும் வேந்தே...பாகு மொழியில் பலியாகாதே !

வச : பாருங்கள் ஸ்வாமி பாருங்கள்......நான் கேள்விப் பட்டது உண்மைதான்......மகாராணி மந்திரஜாலம் வேறு நடத்துகிறார்களாம்......உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க......

அர : கவனிக்க வேண்டியதுதான் ! (காவலரிடம்) யார் இங்கு பேசியது என்று தேடிப் பாருங்கள்.

(சிப்பாய்கள் சப்தம் வந்த திசை நோக்கி ஓடுகிறார்கள்)

மனோகரன் : புரையோடி விட்ட புண்ணுக்கு புனுகுப்பூச்சு. பொல்லாங்குக்காரியின் போலி வேடத்தைப் பொசுக்க பொறுமை.........போதுமம்மா பொறுத்ததெல்லாம், உத்திரவு கொடுங்கள். உருத் தெரியாமல் ஆக்கு கிறேன் அந்த ஊர் கெடுப்பவளை ?

பத்மா : மனோகரா ! இரு......

(அங்குள்ள பெட்டியிலுள்ள வாளை மனோகரனிடம் கொடுக்க)

மனோ : அம்மா ! ஒரே வீச்சு ! வேஷக்காரி வசந்தா தொலைந்தாள் !

பத் : பொறு செல்வா...

அதைவிட ஒரு புனிதமான காரியத்தில் உன்னை ஈடுபடச் சொல்கிறேன்.

மனோ : என்னம்மா அது ?

பத்மா : இந்த வாள் ஏது தெரியுமா ?......

மனோ: நாடகத்தில் கூட இதுமாதிரி ஒரு வாள்...ஆமாம் பார்த்தேன்......

மாளிகையின் வேறு பகுதியில்!

சத்யசீலர்: நாடகத்திலே வந்த வாள், போலி வாள்! நான் சொல்வது போர் வாள்! மனோகரனின் பாட்டனர்- மகாராணியின் தந்தை-அதிவீர சேரருடையது அந்த வாள்!

ராஜப்ரியன்: அதிவீர ·சேரன்......நாடகப் பெயர்... அதி தீர சூரர்......உம்...அப்புறம்?......

சத்யசீலர்: பாண்டியன் முத்துவிஜயன்...எதிர்பாராத முறையில் மனோகரனின் பாட்டனரை ஜெயித்து ரத்ன சிம்மாசனத்தையும் கைப்பற்றினன்...போர் முனையில் காயப்பட்ட பாட்டனர் சாகும்போது முத்து விஜய னைப் பழி வாங்கும் பொறுப்பை குழந்தை மனோகர னிடப் ஒப்புவித்து உயிர் நீத்தார்......

தாத்தாவின் விருப்பத்தை மனோகரனின் தடந்தோள் கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

* * *

பத்மாவதி: ஆமாம் மனோகரா! முத்து விஜய பாண்டியன் முறியடிக்கப்பட வேண்டும். செததுப் போன தாத்தா வின் சமாதியின் மீது வெற்றி மலர்கள் தூவவேண்டும். நம்முடைய பரம்பரை ரத்ன சிம்மாசனம் விடுதலை பெற வேண்டும்......

மனோ: விடை கொடுங்கள். வெற்றி மழை பொழிய வைக்கிறேன். வீணன் முத்து விஜயனின விலா எலும்பை நொறுக்குகிறேன்.

சூது செய்து பிறர் நாட்டை சுருட்டிக் கொள்பவர் கள் இப்படித்தான் சுருண்டு போவார்கள் என்பதற்கு அவனை உதாரணமாகக் காட்டுகிறேன்.

பத்: செல்வா! சிந்தை குளிர்ந்ததடா கண்ணே... நம் பரம்பரைக் கேற்பட்ட களங்கத்தை நீதான் கழுவ வேண்டும்......

**மனே:** பரம்பரைக்கேற்பட்ட களங்கம் பாண்டியன் முத்துவிஜயனுல் மட்டுமல்ல- பாதகி வசந்த சேனையாலுந்தான்! ஏமாந்த காலத்தில் வெற்றி முரசு கொட்டிய வெறியனை மட்டுமல்ல உங்கள் இன்ப வாழ்வில் குறுக்கிட்ட வஞ்சகியையும் விட்டுவைக்காது இந்த வாள்!

**பத்:** முதலில் நான் சொன்னதைச் செய்! மனேகரா! அப்பாவிடம் அனுமதி பெற்றுவா!

(தெருவில் முரசறையப் படுகிறது.)

**முரசறைவோன்:** போர்! பயங்கரமான போர்! நமது நாட்டின் மானத்தை - எதிர் காலத்தை நிர்ணயிக்கும் போர்! வீரர்களே தயாராகுங்கள்! வீட்டுக்கொருவர் புறப்படுங்கள்— வீணர் எலும்புடைப்போம்- வெற்றிக் கொடி பிடிப்போம். வாரீர்! வாரீர்! போருக்கு!... போர்! போர்! போர்! டம டம டம!

* * *

**வசந்தன்:** போர்! போர்! வீராதி வீரர்களே! கிளம்புங்கள் போருக்கு! போரிலே இரண்டு வகை உண்டு. ஒரு போரிலே மாடுகள் மேயும். அது வைக்கோற் போர்! இன்னெரு போர் வெறும் அக்கப் போர்! நான் சொல்லும் போர், மண்டைகள் உடையும் சண்டையைப் பற்றி! புலிக்கண் வீரர்களே! சிங்கங்களே! சிறுத்தைகளே! செம்மறி ஆடுகளே! சீறிக் கிளம்புங்கள்! உம், புறப்படுங்கள். ஏன் நிற்கிறீர்கள்! வெட்டுங்கள் வீழ்த்துங்கள்! கொல்லுங்கள்...குடலைக் கிழியுங்கள்......

[வீரர் பொம்மைகள் இப்போது காட்சியாகின்றன.]

**விகடன்:** சபாஷ்! வசந்தன்—நீ வீரனேதான்.

**வசந்தன்:** சந்தேகமில்லை...சந்தேகமில்லை......

(என்று வாளை உருவுகிருன். கையில் வாளின் பிடி மட்டும் இருக்கிறது.....

வசந்த சேனை வருகிறாள் அம்பு போடு கிறான்)

வ. சே: வசந்தா, என்ன இது?

விக: போர்க்களத்துக்கு போவுதாம்...அதுக்கு......

வசந்தி: போர்க்களமா?......
நீ ஏண்டா கண்ணு போகணும்?......

விகடன்: அதெல்லாம் வீரர்கள் போகவேண்டியஇடம்...

வசந்தன்: உம்!... விடைகொடம்மா...

வசந்தி, உடம்பு கெட்டுவிடும்...... உனக்கு வேண்டாம் திமிர் பிடித்த வேலை......

வசந்தன்: தாயே! நீயா இப்படிப் பேசுவது யுத்த களத்தில் மார்பிலே காயம்பட்டான் மகன் என்ற செய்தி கேட்டு மனங்கலங்கி அவன் பால்குடித்த கெண்டியை உடைத்துவிடுகிறேன் என்று சபதம் செய்து—மகன் முதுகிலே காயம் பட்டு மடிந்ததைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த வீரத் தாயின் வம்சத்தில் வந்த நீயா இப்படிப் பேசுவது—கோழை! கோழை!... கோழை!...

வசந்தி: அய்யோ ... தலைவிதி!......... விகடா! வைத்யரை வரச்சொல்லி யிருக்கிறேன்—வசந்தனுக்கு சிகிச்சைகள் ஆரம்பமாகட்டும்......
சிம்மாசனம் காத்திருக்கிறது......

* * *

மனோகரன்: தந்தையே!...
விடை கொடுங்கள்!...

அரசன்: மனோகரா! மறக் குலத்தின் மகிமையை மாற்றார் உணரச்செய்! எதிரியின் மமதையை மண்ணோடு மண்ணுக்கு!

வசந்தி: வெற்றிமாலை எடுத்து வா!

வசந்தி மாலையை எடுத்து வந்து.

வசந்தி: என் கண்மணிக்கு நான்தான் சூட்டுவேன்...

மனோ: ராஜப்பிரியா வெற்றி பெறுவதற்கு முன் வெற்றி மாலை சூடுவது வீரர்க்கு வழக்கமில்லை

(வசந்திக்கு முகம் மாறுகிறது......)

மனோகரன் : வருகிறேன்—

அரசன் : வெல்க! வாழ்க!

இருவரும் போய்விடுதல்......

அரசன் : வசந்தி! ......கோபமா கண்ணே—
மனோகரன் சிறுவன்—மன்னித்துவிடு!

வசந்தி : அவன்மீது எனக்கு கோபம் ஏற்படவேயில்லை அவன் என் ஆசைச் செல்வன்—அன்புத் திருமகன்—என்னை அவன் வெறுக்கலாம்—ஆனால் அவன் எனக்கு வெண்ணிலா! விண்மீன்! கன்னல் சாறு!

அரசன் : வசந்தி!......

பத்மாவதியின் அந்தப்புரத்தின் வெளிப்புறம்.

மனோகரன் : அம்மா......

பத்மா : செல்வா...

தோழியிடமுள்ள தாம்பாளத்தை வாங்கி மனோகரனுக்குத் திலகமிடுகிறாள்..,

பத்மாவதி : பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் மகிழ வெற்றி வீரனாக வா, மனோகரா!

மனோகரன் : அம்மா! வெற்றி பெற்றால் ரத்தின சிம்மாசனம் வரும்! இல்லையேல் ரத்தம் தோய்ந்த இந்த வீரவாள் வரும் என் செய்தி கூற!

[ரதத்தில் புறப்படுதல்]

* * *

மாளிகையை அடுத்த நந்தவனம்.
இரவு நேரம்......
வசந்த சேனை, தனியாக மறைந்து மறைந்து யாரையோ எதிர் பார்க்கிறாள்......
வசந்த சேனையின் தோழி வருகிறாள்.

வசந்தா : எங்கேயடி பௌத்தாயனர்?

[ஈனக் குரலில்]......

தோழி : மெதுவாக இதோ...

[மெதுவாக] ......

தோழி சுட்டிக் காட்டவே—பௌத்தாயனன் வந்துகொண்டிருக்கிறான்...

வசந்தா : சரி...நீ போ ;...

வசந்தா : பௌத்தாயனரே...இரவே புறப்படுகிறீரா......

பௌத்தாயன் : ஆமாம்...ஏன் ?...

வசந்தா : தந்திரமாக நடந்து கொள்ளும்......

பௌத்தாயன் ; அவனை திரும்பாமல் செய்துவிடுகிறேன். நீங்கள் கவலையை விடுங்கள்.

வசந்தா : அவன் தலை என் காலடியில் கிடக்கவேண்டும்.

பௌத்தாயன : ஊஹூம்...தலையைக் கொண்டுவந்தால் நமக்கு ஆபத்து. அவனை யுத்த களத்திலேயே கொன்று அவனுடைய போர்வாளை உங்களிடம் காட்டுகிறேன்.

வசந்தா : ஆமாம்—பழியை பகைவர்கள் மீது போட்டுவிட வேண்டும். மனோகரனின் சாவு மர்மமாகவே இருந்து விடும்—

பௌத்தாயன் : ஓ !

வசந்தா : உமக்கு ஆயிரம் பொன் பரிசு !......

பௌத்தாயன் : அம்மணீ, நான் போர் வாளைக் கொண்டு வருவேன், நீங்கள் பொன் மூட்டையை......

வசந்தா : பூரிப்பான செய்தி—கொண்டுவாரும்—பொன் என்ன, வைரங்களை அள்ளித் தருகிறேன்.

பௌத்தாயன் : சரியம்மா...

வசந்தா : ஜாக்ரதை......

(முத்துவிஜயன் அரண்மனை?)

சிப்பாய் 1 : அரசே ! ஆபத்து...ஆபத்து...மதில்களுக்கு நாசம் !

சிப்பாய் 2 : பூரண கும்பம் முறிந்தது.

சிப்பாய் 3 : எதிரிகள் முன்னேறுகிறார்கள்.

விஜயா : அப்பா! இந்த ரத்ன சிம்மாசனத்துக்காக இவ்வளவு ரத்தமா ஓடவேண்டும்?

முத்து விஜயன் : ரத்தம்... ரத்தம் எனக்கு நீச்சல் குளம். யுத்தம் எனக்கு ஒரு பொழுது போக்கு! இதையறியாமல் மோதுகிறான் இந்த முத்து விஜயனிடம், மூர்க்கன்!

சிப்பாய் : ஆபத்து! ஆபத்து! அணிகள் சிதறிவிட்டன

மு. வி : எங்கே சேனாதிபதி? எங்கே அந்த சிங்கநெஞ்சன்?

சிப்பாய் : புகழுடம்பு பெற்றுவிட்டார், வேந்தே! போர்க்களத்தில் மடிந்துவிட்டார்.

சிப்பாய் 2 - மீன் கொடி சாய்ந்துவிட்டது.

மு. வி : ஆ!...இதோ புறப்பட்டு விட்டேன்...எங்கே என் படைகள்...

மனோகரன் படைகள் கோட்டைச் சுவற்றில் ஏறுகின்றன. பலத்த எதிர்ப்பு—

முத்து : வாடா தம்பி!...

வாள் பிடிக்கத் தெரியாத வாலிபனே! வளைத்துவிட்டோம் கோட்டையை என்று எண்ணிவிடாதே

மனோகரன் : கேள்விப்பட்டிருக்கிறேன்- நீர் வீரர்...வாய் வீச்சிலே என்று!

[முத்துவிஜயன் கோபா வேசத்துடன் வாளை வீசிக்கொண்டே...!

முத்து : வாள் வீச்சிலுங் கூடத்தான்!...

இருவரிடையே உக்கிரமான வாட்போர் நடக்கிறது......

கோட்டை வாயிலில் இரு படைக்கும் பயங்கரமாகப் போரிட்டு இறுதியில் மனோகரன் படைகள் உள்ளே நுழையு மளவுக்கு முன்னேறுகின்றன.

முத்து விஜயன் மனோகரன் வாளுக்கு பலியாகிறான்......

கோட்டை வாசலில் மனோகரன் படைகள் வெற்றி முழக்கத்தோடு நுழைகின்றன...
கோட்டை முகப்பில் பாண்டியனின் மீனக்கொடி இறக்கப்பட்டு புலிக் கொடியைப் ராஜப்ரியன் ஏற்றுவிக்கிருன்......
(விஜயாவின் அந்தப்புரம்.)

அமைச்சர் ; அஸ்தமித்து விட்டதம்மா !

விஜயா : ஆ !

அமை : வேந்தர் வெற்றிப் புன்னகையோடு வீர மரணத்தை அணைத்துக் கொண்டார்.

விஜ : அப்பா !......

அமை : அமைதியாக இருங்கள்...

விஜ : அமைதியா ? தந்தை பிணமானுர்...கொடி சாய்ந்தது...முடி வீழ்ந்தது...
வெற்றிகீதம் ! இன்றைக்கே முடிவு கட்டுகிறேன்! இன்றிரவே !

* * *

(இரவு மனோகரனின் பாடிவீடு.)
தூங்கிக் கொண்டிருக்கும் மனோகரனைக் கொல்வதற்கு பௌத்தாயன் காட்டாறி ஓங்குகிருன்.
அப்போது சிப்பாய் உடையில் யாருக்கும் தெரியாதபடி உருவிய வாளோடு நுழைந்த விஜயா தன்னை அறியாமல் 'ஓ' வென அலறுகிருள்.
மனோகரன் விழித்தெழுந்து விஜயாவின் கையைப்பிடித்துக்கொண்டு

மனோ : யாரடா நீ

விஜயா : நீர் உண்டாக்கிய சுடுகாட்டிலே மறு உயிர் பெற்ற பேயுமல்ல, பிணமுமல்ல ! உனது பார்வையில்

தட்டுப்படாமல்போன பகைவர்களில் ஒருவன்—பாண் டிய நாட்டு வீரன் !

மனோ: பாண்டிய நாட்டு வீரன் ! உம்... பாதி ராத்திரி யிலே பதுங்கிப் பாயும் பட்டாளப் பயிற்சிக்கு முத்து விஜயன் ஆட்சியிலே முதல் இடம் போலும், முது கெலும்பில்லாதவனே. கையிலே வாளும், நெஞ்சிலே கோழைத்தனமும் கொண்டவர்களில் ஒருவன் மிச் சமா? ஓடிப்போ...உயிரைக் காப்பாற்றிக்கொள்...

ராஜப்பிரியன் : மனோகரா!... இவனை விடக்கூடாது...

மனோ : போகட்டும் பாவம்...மன்னித்துவிட்டேன்

விஜ ; மன்னிப்பு கேட்கும் மரபல்ல...

மனோ : மறைந்திருந்து தாக்கும் மரபு...மாவீரன் !

ராஜ ; தூங்குபவன் தலையைத் துண்டாடுபவர்களும் வீரர்களதான், பாண்டியநாட்டுப் பள்ளிக்கூடத்திலே ! போடா போக்கற்ற கோழையே !

விஜ, கோழை...நானா கோழை! இதோ பார்...இப் பொழுதே நேராகவே பழிதீர்த்துக்கொள்கிறேன்...

[வாளை உருவுகிருள். மனோகரன் அவளைத் தடுக்க அப்போது அவள் தலைப்பாகை நழுவுகிறது.]

மனோ : ஆ ! பெண் !

விஜ : உன் பகைவரின் பெண்... பழிவாங்க வந்தவள்...

ராஜ : இளவரசி !

மனோ : அற்புதமான காட்சி, வளையல் ஏந்தும் கை களிலே வாள் !

விஜ : பேசாதீர் ! ... நீர் வீரனுல் என்னை ஜெயித்த பிறகு பேசும் !

மனோ : வேல்விழி மாதர்களிடம் வீரர்கள் ஜெயித்தார் கள் என்பதற்கு சரித்திரமே கிடையாது, இளவரசி !

விஜ ; கேலி தேவையில்லை...எடும் வாளை,

மனோ : என் வாள் களத்திலேதான் விளையாடும் ... கனி களைக் காயப்படுத்தாது !

விஜ : துணிவிருந்தால் - வீரர் லக்ஷணத்தைப்பற்றி பேசியதெல்லாம் வாய்வீச்சாக இல்லாமல் இருந்தால் வாளை வீசும்... நல்ல தீர்ப்பு கிடைக்கட்டும் ...

மனோ : நல்ல தீர்ப்பு ... வாள்முனை வழங்காது இனிமேல் வழக்கு மன்றத்திலே தான் பெறவேண்டும்! பாண்டியன் பெற்ற பைங்கொடியே நீ இப்போது கைதி — பாதுகாப்புக் கைதி! ராஜப்பிரியா! அழைத்துச் செல்!

ராஜப் : அதோ கோட்டை வாசலிலே எங்கள் கொடி! ராஜகுமாரி மனோகரனின் அடிமை என்பதை அறிவிக்கும் கொடி !

விஜயா : பேசாதே! அரசிளங் குமரியாக வாழ்ந்தேன் - அடிமையாக வாழமாட்டேன். வானம்பாடியாகத் திரிந்தேன் — வல்லூறுகளின் கோரப் பிடியிலே சிக்க மாட்டேன. சுதந்திரத் தென்றலிலே மிதந்தேன் — அடிமைச் சூறுவளியிலே அகப்பட்டுக் கொள்ளமாட்டேன் - மாற்றானின் காலடியைவிட மரணத்தின் மடி எவ்வளவோ மேல்.

விஜயா அந்தப்புரம் "வாழ்வதோ மாது நான்" பாட்டு.

விஜயா விஷம் அருந்த முயற்சிக்கிருள்.

(உள்ளே வந்த) மனோகரன் : விஜயா! தற்கொலை கோழைத் தனம் !

விஜயா : இருட்டு வேளையில் பெண்களின் அந்தப்புரத்தில் நுழைவது அதைவிட கோழைத்தனம் ...

மனோகரன் : பரவாயில்லை. மரணப் புயலிலிருந்து ஒரு மலர்க் கொடியைக் காப்பாற்றி யிருக்கிறேன்.

விஜயா : இந்த அடிமையின் சாவை யாரும் தடுக்க வேண்டாம்.

மனோகரன் ; அடிமை யார் அடிமை? அழகே உருவான ராஜகுமாரி நீ ...

(ராஜப்பிரியன் நுழைந்தபடி)

ராஜ : அதனால்தான் சொல்லுகிறேன் அர்த்தராத்திரியில் அந்தப்புரத்தில் பிரவேசிக்கக் கூடாதென்று!

மனோ : ராஜப்ரியா ! தெரியுமா சேதி ?

ராஜ : தெரிந்துதானே வந்தேன் உன் சேதி ! மனோகரா ! எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய நேரம். ஏமாந்து விடாதே ! இளவரசி கொஞ்ச நேரத்துக்கு முன் உன்னைக் கொல்லவந்த எமன் !

விஜ : இருதயம் எனக்கும் இருக்கிறது. நல்ல இருதயம் படைத்தவர்கள் ஒரு முறைதான் தவறு செய்வார்கள்

மனோ : விஜயா ! நீ வாழ வேண்டியவள். அதுமட்டுமல்ல என் பாதுகாப்பில் இருக்கிறாய் ... இதுபோன்ற விபரீத செய்ல்களை என்னால் அனுமதிக்க முடியாது.

விஜ : உயிர் உங்கள் அடிமையல்ல. அது ஆண்டவன் தந்தது.

மனோ : அதைப்பற்றிய விள்க்கம் நாளை விசாரணை மண்டபத்தில்.

(பாண்டியமக்கள் விசாரணை மண்டபம்)

ராஜப்பிரியன் : கொலை செய்ய முயன்றார்—தற்கொலை செய்துகொள்ள யத்தனித்தார். மன்னிக்க முடியாத மாபெருங் குற்றங்களைச் செய்திருக்கிறார், ராஜகுமாரி! மக்கள் மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டிருக்கிறார் ! எங்கள் அரசிளங்குமாரரை, எனது ஆருயிர்த் தோழரை, சோழர் குலத் திலகத்தை இந்த மனோகரனை பிரிக்க முயன்ற யுவராணியின் ஆயுளுக்கே முடிவுகட்ட வேண்டும். அரசிளங்குமாரியாரே ! உங்கள் ஆயுள் முழுவதும் நான் தரும் தண்டனையை அனுபவிக்கத் தயாராயிருங்கள். நாளை மாலை சூரிய அஸ்தமனத்திற்குள் – காளி கோயிலில் – வேண்டாம் தண்டனையை ஒருநாள் ஒத்திப்போட நான் விரும்பவில்லை - பாண்டிய நாட்டு பைங்கொடி விஜயாதேவி சோழநாட்டு சுந்தரனை கொலைசெய்ய முயன்ற குற்றத்திற்காக இன்றே - இப்போதே – இதே இடத்திலே – எல்லோர் முன்னிலையிலும் மனோகரனுக்கு மாலையைச் சூட்டி மணாளனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்!

(பாண்டியன் அரண்மனை)

மனோகரன் : விஜயா ... இந்த அரண்மனையில் நீ ஒருத்தி தான் அழகி என்று நினைத்தேன். உனக்குப் போட்டியாக ஒரு பொற்கொடி யிருப்பது தெரியாமல் போய் விட்டது.

விஜயா : யார்?

மனோ : [கண்ணாடியில் தெரியும் விஜயாவின் உருவத்தை காட்டி] அதோ! தங்க ரோஜாவிலே வைரப்பனித்துளி களின் சதிராட்டம் இந்தச் சிரிப்பு!

விஜ : அதிருக்கட்டும்! எதிரியின் மகள் நான்! என்னை தங்கள் தாய் தந்தையர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

மனோ : நானும் அப்படித்தான் சந்தேகித்தேன். எதிரி யாயிற்றே நான் என்னை நீ ஏற்றுக்கொள்வாயோ என்று!

விஜ : உங்கள் வீரத்தைக் காதலித்தேன். என் தாய் நாட்டு மண் அதைத் தடுத்தது! உங்கள் வசீகரத்தில் மயங்கினேன்! அப்பாவின் பாசம் அதற்கு அணை போட்டது. முடிவில் உங்கள் நேர்மையான இருதயம் என்னை ஜெயித்துவிட்டது! என்ன?

மனோ : பேசு கண்ணே ... பேசு! உன் அமுதூறும் இதழ் கடலின் தேனலைகளை ... கண்கள் எழுதிக் குவிக்கும் காதற் காவியங்களை ரசித்துக்கொண்டே யிருக்கிறேன் இதயராணி ... இன்னும் கொஞ்சம் பேசு ...

["சிங்காரப் பைங்கிளியே ... பேசு" —பாட்டு]

[பாடிக்கொண்டு படகில் போகும்போது பௌத்தாயன் கட்டாரியை வீசுகிறான் குறி தவறிவிடுகிறது.]

மனோ : என்ன! விஜயா?

விஜ : யாரோ கட்டாரியை உங்கள்மீது வீசிவிட்டு ஓடு கிறான் ... அதோ!

மனோ : ஏதோ சூழ்ச்சி நடக்கிறது ... நாமும் உடனே புறப்படுவோம் வா!

[வசந்தசேனை அந்தப்புரம்]

[பௌத்தாயனன் மனோகரனின் போர் வாளுடன் பிரவேசிக்கிறான்.]

வசந்தா : பௌத்தாயன் ...

பௌத்தாயன் : கொண்டு வந்தேன், போர்வாளை !

வசந்தா : சபாஷ் ! ...

பௌத் : அம்மணி ! ... வெற்றி கண்ட மனோகரன் ... விஜயாளை விவாகம் வேறு செய்து கொண்டான் ...

வசந் : அப்படியானால் ...

பௌத : கேளுங்கள் - நீச்சல் விளையாட்டு நடத்தினார்கள் விஜயாளை விதவையாக்கிவிட்டு, வாளோடு வந்து விட்டேன்.

வசந்தா : மனோகரன் இறந்துவிட்டானா ?...

பௌத் : நிச்சயமாக ! ... அம்மணி ! பரிசுத் தொகை !

வசந் : இதோ ! ...

[பொன் முட்டையை அவனிடம் கொடுக்கிறாள்.]

பௌத்தாயனரே ! ... இன்னொரு காரியம் ... ஒரே குறியில் இரண்டு வேட்டை !

பத்மாவதியிடம் இந்த செய்தியைச் சொன்னால் ... நெஞ்சு வெடித்து செத்துவிடுவாள் ... பிறகு ... நான் தான் ராணி ! ... நீர்தான் பிரதம மந்திரி ! ...

பௌத் : பிரதம மந்திரியா ? ... அப்ப எது வேண்டுமானாலும் செய்கிறேன் ...

பத்மாவதி அந்தப்புரம்.

தோழி 1. உம்...போரிலே ஏற்பட்ட களைப்பு – புது மனைவியுடன் களிப்பு – எப்படியம்மா சீக்கிரம் வருவார்...!

பத்மா : எனக்கு விஜயர்வைக் காண வேண்டுமென்று ஆசை துடிக்கிறதடி !...

தோழி 2. அம்மா...யாரோ ஒரு துறவி, உங்களைப் பார்க்க வேண்டுமாம், அவசரமாக !

(துறவி வேடத்தில் பௌத்தாயனன் வருகிறான்.)

பத்மா: வணக்கம்...

துறவி: வாழிய நலம்...மகாராணி...முதலில் இருதயத்தை இரும்பாக்கிக் கொள்...

பத்மா: என்ன?...

துறவி: கரும்பல்ல நான் கூறப்போகும் செய்தி! உம்... கடலில் துரும்பம்மா மனித வாழ்க்கை!

பத்மா: என்ன சாமி; தொடர்பில்லாமல் பேசுகிறீர்கள்.

துறவி: தொடர்பற்றவன்தானே துறவி!... உன் மகன் வெற்றியடைந்த சேதிகேட்டு எவ்வளவு மகிழ்ந்திருப்பாய்...

பத்மா: ஆமாம் ஸ்வாமி!...

துறவி: சந்தோஷத்தை அணைத்துக் கொள்ளும் அதே உள்ளம், சங்கடத்தை ஏன் சந்திக்க மறுக்கிறது?

பத்மா: ஸ்வாமி...என்ன நேர்ந்தது...சொல்லுங்கள!

துறவி: இதோ...இந்தப் போர்வாள் சொல்லும்...

பத்மா: ஆ!...

துறவி: போய் விட்டான் உன் புதல்வன்...புண்யலோகத்துக்கு!...

பத்மா: ஆ...மனோகரா!...

வந்துவிட்டேனம்மா

[என்ற குரல் கேட்கிறது. தோழியின் மீது சாய்ந்தவள திடுக்கிட்டு கண்களை நம்பாமல் திரும்பிப் பார்க்கிறாள]

"மனோகரா!"

மனோகரனைத் தழுவிக் கொண்டு — ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்...

மனோகரன்: ஏனம்மா இப்படிப் பார்க்கிறீர்கள்...என்ன நடந்தது...? யார் இந்த சாமியார்?...

(கையிலுள்ள போர்வாளைக் கண்டு)

ஆ...என் போர்வாள் ... காணமற் போனது...எப்படி இங்கே வந்தது...?

பத்மா: மனோகரா! நீ என்னைப் பிரிந்துவிட்டதாக இந்தப் பாவி சொன்னான்...

ராஜப்ரியன்: திருட்டுப் பயல்!...வாளைத்திருடியதுமல்லாமல்...வாலை வேறு நீட்டுகிறானே. தாடியைப் பார், தாடியை!

[தாடியைப் பிடிக்க தாடி கையுடன் வருகிறது]

மனோகரன்: பௌத்தாயனன்...

ராஜ: சதியிலே புது அத்யாயம் – போர்வாளை திருடி வந்து காட்டினால்...மகாராணி இறந்துவிடுவார்கள். சரியான சூழ்ச்சி...

மனோகரன்: தேளின் கொடுக்கே!...யாருடைய திட்டமடா இது!...சொல்...

பத்மா: மனோகரா, பாவம்...அவனை விட்டுவிடு...

மனோகரன்: விடக் கூடாதம்மா...ராஜப்ரியா...இவனை சிறையிலே பூட்டி வை!

பௌத்: எல்லாவற்றுக்கும் வசந்தசேனைதான் காரணம்!

மனோகரன்: வசந்தசேனை! இனியும் அவளை உயிரோடு விடக்கூடாது!

(போகிறான்)

பத்மா: மனோகரா! நில் – எங்கே ஓடுகிறாய்?...

மனோகரன்: அம்மா இன்னும் என்ன – உங்கள் சபதத்தை நிறைவேற்றி விட்டபிறகு!...

பத்மா: சொல்லுகிறேன், முதலில் வாளை உறையில் போடு!...மகாராஜாவுக்கோ வசந்தசேனைக்கோ – என் அனுமதியின்றி, எந்தவிதமான தீங்கும் செய்வதில்லையென்று ஆணையிடு!...என்மேல் ஆணையிடு...

மனோ: அம்மா!

பத்மா: தாயினமேல் ஆணையிடு!...

மனோ: அரசரை ஒன்றும் செய்வதில்லையம்மா.

பத்மா: கூடாது! வசந்தசேனைக்கும் சேர்த்துத்தான்!

மனோ: வசந்தசேனை...வட்டமிடும் கழுகு!...வாய் பிளந்து நிற்கும் ஓநாய்! ..நம்மை வளைந்துவிட்ட மலைப்பாம்பு அவளுக்கு இரக்கம்–??? முடியாது! கூடாது!...

பத்மா: உன்னிஷ்டம்...ஊரார் நகைக்கட்டும் தாய் சொற் கேளாத் தனயனென்று!...நாடு சிரிக்கட்டும் – அடங்காத மகனைப்பெற்ற அன்னையென்று!...

மனோ: அய்யோ ... அப்படியொன்றுமில்லையம்மா ... இதோ ஆணையிட்டு விடுகிறேன்.

பத்மா: செல்வா!...

* * *

(வசந்தசேனை அந்தப்புரம்.)

வசந்தா: பௌத்தாயனன் ஒருகுட்டிச்சுவரு!...கோழைப் பயல்!...என்னை நிச்சயம் காட்டிக்கொடுத்து விடுவான் நான் தப்ப வேண்டுமானால் அவன் உயிரோடு இருக்கக்கூடாது.

தோழி: பாவம் பௌத்தாயனன்!

வசந்தா: ஹூம் தேனை எடுக்க வேண்டுமானால் பல தேனீக்களை கொன்றுதான் ஆகவேண்டும்...சரி நான் சொன்னதை ஏற்பாடு செய்!

* * *

[சிறைச்சாலை வசந்தசேனாவின் தோழி கையிலே ஒரு கலயத்தோடு ரகசியமாக சிறைக்காவலாளியோடு பேசுகிறாள், பின்னர் காவலாளி அந்தக் கலயத்தை எடுத்துச் சென்று பௌத்தாயனனிடம் கொடுக்கிறான்.]

பௌத்தாயன்: கொடுக்கிற தெய்வம் கூரையை பிச்சுக்கிட்டு கொடுக்கும்! வாழ்க வசந்தசேனை!

என்று மூட்டையை அவிழ்க்க, படமெடுத்தபடி பாம்பு வெளிவந்து கடித்து விடுகிறது...

பௌத்தாயனன் சாகிறான்

* * *

வசந்தா—அரசர் படுக்கையறை
"பொழுது புலர்ந்தது" பாட்டு
ரத்ன சிம்மாசனம் அவைக்கூடத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. அதை வசந்தி பார்க்கிறாள். விஜயா பத்மாவதியின் முன் வணங்குகிறாள்.

* * *

[அந்தப்புரம்]

வசந்தா: உம், நாளை மனோகரனுக்கு வெற்றிவிழா வரவேற்பு! ...அப்போது நான் விதவையைப் போல ஒரு மூலையில்......

அரசன்: (சங்கடத்துடன்)........வசந்தி! இப்படியெல்லாம் பேசாதே — சகலகௌரவத்தோடும் நீ சபைக்கு வரலாம்......

வச: வரலாமா?

அர: உம்...வரலாம்.

வச: உம்...தயக்கம் பிறந்துவிட்டது...பாவம்! நீங்கள் என்ன செய்வீர்கள். சபையோர்கள் அனுமதிக்க மாட்டார்கள். சக்கரவர்த்தியாயிருந்தாலென்ன சாதாரண பிரஜைகளுக்கு பயப்பட வேண்டியவர்தானே தாங்கள்!

அர: இல்லை...வரலாம் நீ......

வச: வரலாம்!... எங்கே வந்தால் என்ன? எதிரி நாட்டிலே இருந்து வந்திருக்கிற அந்த ரத்ன சிம்மாசனத்திலே அல்லும், பகலும் உங்கள் அன்பையே நினைத்து தவம் இருக்கும் இந்த தரித்திரம் பிடித்தவள் பட்டமகிஷிபோல பக்கத்திலே அமர முடியுமா என்ன? அவ்வளவுக்கு கொடுத்து வைத்த பாவியா நான்?

அர: பக்கத்திலென்ன—பரமசிவனைப் போல பலமிருந்தால் உன்னை என் தலையில்கூட வைத்துக் கொள்வேன், கங்கையைப் போல!

வசந்தி: அப்படியானால் நாளை...... தர்பாரில்!

* * *

அவைக்கூடம். "மனோகரன் வாழ்க!" என்ற முழக்கம், அரசர் வசந்தசேனை யோடு நுழைகிறார்.

பிரதானி 1: வசந்தசேனைக்கு ராஜ விருதுகளா? மன்னர் மயங்கித்தான் விட்டார்.

பிரதானி 2, மயக்கத்தால், இந்த மறவர் பூமியின் மானத்தையே வாங்கிவிட்டார்!

பிரதானி 3: அவமானச் சின்னம்— அவளோடு அரசர்... அதுவும் அவைக்களத்தில்

பிரதானி 4: சத்திய சீலரே...என்ன இது?

சத்யசீலா: விண்மீன் இருக்க வேண்டிய இடத்தில் மின்மினி......

[மனோகரன் வாழ்த்தொலிகளோடு நுழைகிறான். வசந்தசேனை ரத்ன சிம்மாசனத்தில் பார்த்ததும் கோதிப் படைந்து "ஆ" வென அலறுகிறான்.]

ராஜப்பிரியன்: மனோகரா! தாயின் கட்டளை!

வசந்தசேனை: புதல்வா.........நினைவிருக்கிறதா............ போரில் ஜெயித்த பிறகே வெற்றிமாலை அணிவேன் என்றாயே—இதோ என் கண்மணிக்கு நான் சூட்டும் வாகைமாலை

மனோ: சீ! வெற்றிமாலை!...உன் கையால்...வாளை (உருவுகிறான்)

சத்யசீலர்: மனோகரா...தாயின் சொல் தட்டிவிடாதே...

ராஜப்பிரியன்: ஆமாம்...மனோகரா!

ஆத்திரமடைந்த மனோகரன் ராஜப்பிரியன் கன்னத்தில் அறைந்துவிட்டு வேகமாக வெளியேறுகிறான்]

* * *

பத்மாவதி அறை:

மனோகரன்: அம்மா!

பத்மாவதி: மனோகரா!...என்ன நடந்தது?

மனோ: என்ன நடக்க வேண்டுமென்று எண்ணி என் கைகளைக் கட்டிப் போட்டீர்களோ அது நடந்தது. அம்மா! இப்படி பயங்கரமாகக் கட்டளை இடுவீர்கள் என்று முன்பே தெரிந்திருந்தால் முத்து விஜயனைக் கொன்று—படை வீரர் பலரின் உயிரைத் தந்து—அந்தப் பாதகி அமர்வதற்கு சிம்மாசனத்தைக் கொண்டுவந்திருக்க மாட்டேன். நீங்கள் அமர வேண்டிய சிம்மாசனத்தில் அவளா? அதற்காக ஒரு படையெடுப்பா?

பத்மாவதி: படையெடுப்பால் வந்த பயன்தானே இந்தப் பைங்கிளி (விஜயாவைக் காட்டுகிறாள்) இதை நினைத்து அதை மறந்துவிடு மனோகரா!

(விஜயாவிடம்)

விஜயா உன் கணவனை சாந்தப் படுத்து!

* * *

மாளிகையின் ஒரு பகுதி.
வைத்யன் வசந்தனுக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறான்......

வைத்யன்: உம்... சாப்பிடணும்......

வசந்தன்: ஏய்—வைத்யா! இந்த மருந்துக்குப் பெயர் என்ன?

வைத்யன்: சுயபுத்தி சூரணம்......

வசந்தன்: இது எதிலே தயாரிக்கப்பட்டது—

வைத்யன்: திராட்சை, தேன், கற்கண்டு, சக்கரை இவைகளால் தயாரிக்கப் பட்டது.

வசந்தன்: அப்ப கசக்குமோ...

வைத்: "ஊஹூம்...கொஞ்சம் புளிக்கும். ஏன்னு ரெண்டு மிளகாயும் சேர்த்திருக்கேன்.

வச: வைத்யா!...எனக்கு என்ன வியாதிடா—

வைத்: தீராத வியாதி...

வசந்: உம்—அதானே பாத்தேன்—எல்லாரும் பைத்யம் பைத்யங்கிறுங்களே—

விகடா! கேட்டியா—எனக்கு பைத்யம் ஒண்ணும் கிடையாது! தீராத வியாதி!

*    *    *

குகை

பெரியவர் மருந்து முறை கண்டு பிடிப்பதில் ஈடுபட்டிருக்கிறுர்...

பெரியவர்: இந்த அருப மருந்து தீர்வதற்குள் வெற்றி நிச்சயம்......

கேசரிவர்மன்: அருப மருந்து... குறைந்து விட்டதே. இன்னும் கொஞ்சம்...

பெரியவர்: தேவையில்லை......இதோ......இன்றைக்கே சாகாத சஞ்சீவி...கண்டு பிடித்து விடுவேன்...

கேசரிவர்மன்: (வசந்தசேனை சிலையைக் காட்டி)...வசந்த சேனை...அவள் இருதயத்தை எடுத்துப் பிழிந்து இந்த சிலைக்கு சிகப்பு வர்ணம் பூசவேண்டும்...அவள் கண்களை...

[ஒரு வெடிச் சப்தம்......குருநாதர் புகை சூழ்ந்து கீழே விழுகிறுர். தூக்கிக் கொண்டு வெளியே வருகிறுன்...குருநாதர் உயிர் ஊசலாடுகிறது...]

பெரியவர்: கேசரி வர்மா...என் கடைசி...வாழ்த்து... அவசரப்படாதே...உன் லட்சியத்திற்கு...மனோகரனை துணையாக்கிக கொள்!...நான்...நான் சாகிறுர்......

கேசரிவர்மன்: ஓய்வின்றி உழைத்தீர், உலகிற்கு ஒரு அதிசயத்தைச் சொல்ல! அருப மருந்து. அந்த முறையைக்கூட எனக்குக் காட்ட வில்லையே...ஸ்வாமி! புதுமையைக் கண்டுபிடித்தவர்கள் எல்லாம், மற்றவருக்கு வெளியிடாமலே மறைந்து விட்டார்கள்... அந்த வழியில் நீங்களும் நடந்து விட்டீர்கள்...இந்த நாட்டுக்கே இப்படி ஒரு சாபமா?...

*    *    *

வசந்த விழாக் கொண்டாட்டம். பாட்டுகள்...
மனோகரனும் விஜயாவும் பாடுகிறார்கள்

விஜயா : இந்த அன்பு மாறவே மாறாதே...

மனோகரன் : இது என்ன கேள்வி விஜயா !

விஜயா : இல்லை... நீங்களும் மாமாவைப் போல்...ஒரு வசந்த சேனையின் மயக்கத்தில் விழுந்து விட்டால்

மனோ : வசந்த சேனை. அவள் பெயரையே என்னிடம் உச்சரிக்காதே!..........என் தாய் இருக்கவேண்டிய இடத்திலே அந்த நாய்...........தணலில் விழுந்த புழுவாக அவளைத் தவிக்கவிட்டு—என் தாயை கொலு மண்டபத்தில் அமர்த்தா விட்டால்...நான் மனோகர னல்ல.

விஜயா திடுக்கிட்டு எழுதல்...

விஜயா : ஆ !...
மனோ : என்ன ?

வசந்தன் ஆசனத்தின் கீழிருந்து எழுந்து

வசந்தன் : காலை மிதிச்சுட்டியே அண்ணி !

மனோ : ஏ, நீ இங்கேயா ஒளிந்து கொண்டிருந்தாய்.

வசந் : உம்...பொம்பளைங்க எல்லாம் தண்ணியாலேயும், பூவாலேயும். தண்ணீப் பூவாலேயும், பூத்தண்ணியாலே யும், பூத்தண்ணியாலேயும் தண்ணீப் பூவாலேயும் அடிச்சா நீங்களுந்தான் ஒளியுவிங்க !

மனோ : (சிரிக்கிறான்...)தைர்யசாலி...

விஜயாவும் சிரிக்கிறாள்......

வசந் : சிரிங்க...சிரிங்க...

அரசனுடன் வசந்தசேனை வந்து கொண்டே......

வசந்தி : வசந்தா!... வசந்தா!...

வசந்தன் : நான் இங்கே இருக்கேம்மா...ஏம்மா...

[அங்கே வந்து]

வசந்தன் : அம்மா !...அண்ணனும் அண்ணியும் என்னைப் பார்த்து சிரிக்கிறாங்க!...

வசந்தி: பாண்டியன் மகளை பாணிக்கிரகணம் செய்தது பற்றித்தான் ஊர் உன் அண்ணனைப் பார்த்து சிரிக்கிறது. தகப்பனைக் கொன்றவனுக்கு தாரமாய் வாய்த்ததைப் பற்றித்தான் உலகமே உன் அண்ணியைப் பார்த்து சிரிக்கிறது...

[பல்லைக் கடித்து]......

சிரிக்கிறார்களாம் சிரிப்பு...... எல்லாம் சீரழித்துவிடுகிறேன்... வாடா நீ!...

வசந்தன்: அதெல்லாம் உன்னால் முடியாதம்மா!...உன்னை புழுமாதிரி தவிக்கவிடப் போவுது அண்ணன் – ஜாக்கிரதை! இப்பத்தான் அண்ணிகிட்ட சொன்னுது. ஏன் அண்ணி!

[கேலியாக]

வசந்தி: உம்...வீராதி வீரர்களாலும் முடியாத காரியம் இந்த வேசி மகனால்தானு முடிடப்போகிறது...

மனோகரன்: ஆ! என்ன சொன்னுய்?

[கட்டாரியை உருவுகிருன்]

நஞ்சு கக்கிய அந்த நாவைத் துண்டாடுகிறேன் பார்!...

[அதைத் தடுத்துப் பிடித்து]

அரசன்: மனோகரா! விடு

மனோகரன்: முடியாது நீர் உம் மனைவியின் மானத்தைக் காப்பாற்ருவிட்டாலும் நான் என் தாயாரின் மானத்தைக் காப்பாற்றியே தீருவேன்.

அரசன்: சொல்வதைக் கேள்...

மனோகரன: முடியாது......உமக்கு வல்லமையிருந்தால் அவளைக் காப்பாற்றும்...

சத்யசீலர்: மனோகரா!...

விஜயா: அத்தான்! அத்தைக்குச் சொன்ன வாக்குறுதி

மனோகரன்: சீ......

[விஜயாவை அடித்துவிடுகிருன்]

மனோகரன்: அம்மா!...

[குழப்பத்துடன் போய்விடுகிருன்.]

அரசன் : வசந்தி !...நீ வரம்பு மீறிவிட்டாய்.
வ. சே : ஸ்வாமி...
அரசன் : சீ...பேசாதே !

[பத்மாவதி அறை]

மனோகரன் : அம்மா... அம்மா... அம்மா... துள்ளிவரும் வேல் ஆவேசத்தை அள்ளிவரும் வாள் அவைகளை எல்லாம் தடுத்திருக்கிறேன். அவைகளைவிடப் பெரியவளா என்னை நகையாடிய இந்த கள்ளி? ஆனால் அவளைத்தான் எதிர்க்க முடியாமல் ஓடி வந்திருக்கிறேன். யாராலம்மா? தங்களால் — தங்கள் கட்டளையால் — சத்தியத்தால் !

பத்மாவதி : மனோகரா ! விஷயத்தைச் சொல் ! என்ன நடந்தது ?

மனோ : தன்மானம் தரைமட்டமானது, வீரம் விலை கூறப்பட்டது. அவமானச் சின்னம் ஆணவத்தால் ஆடியது ! அம்மா ! தங்கள் கட்டளையை உடனே மாற்றிக் கொள்ளவேண்டும்.

பத் : சத்தியம் செய்திருக்கிறாய் செல்வா !

மனோ : வீரன் கோழையாவதா? துடிக்கும் தோள்கள் துவண்டுபோவதா? வேண்டாம்... அந்த விபரீத சத்தியத்தை நான் காப்பாற்றவேண்டாம்.....

[மனோகரன் போய்விடுகிறான்]
விஜயா நுழைகிறாள்...

பத் : என்ன நடந்தது விஜயா...
விஜ : அந்தப் பாதகி வசந்தசேனை (விம்மி அழுகிறாள்)

[அரசர் அறை, வசந்தசேனை கதவைத் தட்டுகிறாள்.]

வ. சே. : பிரபோ ! வசந்தி வந்திருக்கிறேன் பிரபோ !

[அரசர் வாய் திறக்காமல் உலாவிக் கொண்டிருக்கிறார்.

[பத்மாவதி அறை]

பத்மா : அப்படியா சொன்னாள் ! அதை அரசர் கேட்டுக் கொண்டு நின்றார்? அப்போது சத்யசீலர் அங்கே இருந்தாரா விஜயா?

விஜயா: இருந்தார்.

பத்: மனோகரனைத்தான் தாயின் ஆணை தடுத்தது. சத்ய சீலரை எது தடுத்தது...... அந்தக் கொடுமையை எதிர்த்துப் பேச முடியாமல் குரலிலே நடுக்கம் ஏற்பட்டதா? அல்லது நெஞ்சிலே கோழைத்தனம் குடி கொண்டதா? (தோழியிடம்) கூப்பிடடி சத்யசீலரை... உடனே போ... இப்போதே அழைத்துவா!

[வசந்தசேனை முத்தாரத்திலிருக்கும் பதக்கத்திலுள்ள உக்ரசேனன் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.]

தோழி: என்னம்மா... ஏன் இப்போது அதை...

வ. சே.: நான்தான் சொல்லியிருக்கிறேனடி... ஆபத்தில் கைகொடுக்கும் கடவுள் இதுதானென்று.

தோழி: அதன் உதவி இப்போது தேவையேயில்லை.

வ. சே.: அதிருக்கட்டும்... போன செய்தி...

தோழி: மனோகரன் கோபாவேசமாய் இருக்கிறார் மகா ராணியும் விஷயத்தைக் கேட்டு துடித்துப்போய்......

வ. சே.: அடுக்காதே... சீக்கிரம் சொல்.

தோழி: சத்தியசீலரை உடனே அழைத்துவரும்படி தோழியை அனுப்பியிருக்கிறார்கள்.

வ. சே.: இந்நேரத்திலா?

தோழி: ஆமாம்...

வ. சே.: இருட்டு வெளியிலா?

தோழி: ஆமாம்...

வ. சே.: பத்மாவதியின் அந்தப்புரத்திலே சத்யசீலர் வருகிறார்... இரவு நேரத்தில்...

தோழி: வசந்த விழா சம்பவம் பற்றி விசாரிக்க,

வ. சே.: தெரியுமடி எனக்கு... அவர் ஏன் அழைக்கப்பட்டிருக்கிறார்... அது தெரியும்... அதைத்தான் திருப்பி விடவேண்டும்...

இருட்டுவேளை! பத்மாவதியின் அந்தப்புரம்! அங்கே சத்யசீலர்! அதை நேரே காணவேண்டும்! யார்? யாரடி? அரசர் காணும்படி நாம் செய்யவேண்டும்... அதற்கு ஒரு வழி செய்யவேண்டும்... வா...

[அரசர் அறை வசந்தசேனையின் தோழி கதவைத் தட்டுகிருள்]

தோழி : மகாராஜா...மகாராஜா ஆபத்து...கதவைத் திறங்க மகாராஜா...காரியம் கெட்டுவிடும்...ஆபத்து மகராஜா,

அரசர் : என்ன இது?

தோழி : மகாராஜா! அய்யோ...

அர : சொல்லு விஷயத்தை...

தோ : வசந்த சேனையம்மா...தூக்கு போட்டுகிட்டு

அர : ஆ!

தோ : சாகப் போருங்க...சீக்கிரம் போனுத்தான் காப்பத் தலாம்...

அர : எங்கே?

தோ : இந்தப் பக்கம்தான போறுங்க.....அய்யோ..... அம்மா.....

[ஓடுகிருர்கள். ஒரு மரத்தடியில் வசந்த சேனை தூக்குப் போட்டுக் கொள்ள எத்தனிப்பவள் போல் நிற்கிருள்]

வ. சேனை : ஆண்டவனே......அடியாளை உன் திருவடிகளிலே ஏற்றுக் கொள். அரசன் மீது நான் காட்டிய விஸ்வாசமெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிட்டது... அவர் மேல் குறறமில்லை ..என் விதி—நான்தானே அனுபவிக்க வேண்டும்

அரசர் : சேனு! சேனு? (ஓடி வருகிருர்) வசந்தி!...என்ன காரியம் செய்தாய்...இது என்ன பைத்தியக்காரத் தனம்

வ. சே : இல்லை...உண்மைக் காதலுக்குக் கிடைத்த பரிசு மகாராஜா...இனி நான் ஒரு க்ஷணமும் உயிரோடிருக்க விரும்பவில்லை. உங்கள் கண்ணெதிரிலேயே கண்ணை மூடுகிறேன. அதுவே எனக்குப் பேரானந்தம் பிரபு!

அர : வசந்தீ ..வேண்டாம்...

வ. சே : விட்டு விடுங்கள் பிரபு!

அர : வசந்தி...வேண் டாம்...வா...இங்கே

வ. சே: என்னை விட்டுவிடுங்கள் — மகாராஜா — மரண முகப்பிலே ஒரு வேண்டுகோள். தயவு செய்து நிறை வேற்றுங்கள். தற்கொலை செய்துகொண்டாள் வசந்தா என்ற அவச்சொல் தங்களுக்கு வேண்டாம். தாங்களே கொன்று விடுங்கள்—இதோ (கட்டாரியைக் காண்பிக்கிறாள்). தங்கள் நினைவுகளை ஏந்திக் கொண்டிருக்கும் என் நெஞ்சிலே இதைப் பாய்ச்சுங்கள். இதைக் கத்திக் குத்தாகக் கருதமாட்டேன். என் கண்ணாளன் தந்த கடைசி முத்தமாகக் கருதுவேன். உம்...தயங்காதீர்கள்—ஏன் ஸ்வாமி தயக்கம்...

அர: வசந்தி...உனக்கு என்ன புத்தி மாறாட்டமா?

வ. சே: உங்கள் அன்பை இழந்த பிறகு நான் யாருக்காக வாழ வேண்டும்?

அர: வசந்தீ...ஏதோ கோபத்தில் சொல்லிவிட்டேன்...

தோழி: நல்ல கோபம்...கொஞ்சம் தாமதித்திருந்தால் இந்நேரம் கொலை விழுந்திருக்கும்...ஏமாற்றி வாழ்பவர்கள் எல்லாம் இன்ப லோகம் போக வேண்டும்... நீங்கள் எமலோகம் போகவேண்டும்...நல்ல நியாயம் அம்மா இது...

வ. சே: சீ..என்னடி தத்துவார்த்தம் பேசுகிறாய்...மகாராஜாவிடம் பேசுகிறோம் என்ற மரியாதை கூட இல்லாமல்.

தோழி: மனங் கொதிக்குதம்மா...மகாராணியும்...

அர: என்ன......

வ. சே: வாயை மூடு...போ இதைவிட்டு...

தோ: என்னை அடியுங்கள்...கொல்லுங்கள் கவலையில்லை என்றைக்கு இருந்தாலும் உண்மை வெளிவரத்தான் போகிறது... பல நாள் திருடன் ஒரு நாள்...—

வ. சே: மாலினி...நீ போகமாட்டாய்......

தோழி முடியாது...வந்து பாருங்கள், மகாராணி அந்தப்புரத்தை! அர்த்தராத்திரியில் அங்கே சத்யசீலருக்கு என்ன வேலை...

வ. சே: அய்யோ! அய்யோ?...

அரசர்: ஆ!......அப்படியா...உண்மையாகவா?...

(ஓடுகிறார். வசந்தி, தோழி சிரிப்பு)

* * *

பத்மாவதியின் அறை.

பத்மாவதி : அமைச்சரே ! மகாராஜாவையே கேளுங்கள், என்ன சொல்கிறாரென்று !

சத்யசீலா : மகாராஜா இதையெல்லாம் கவனிக்கவே மாட்டார்—

பத் : மனோகரனை நினைத்தால் எனக்கு பயமாயிருக்கிறது.

சத் : பயப்படத்தேவையில்லை-நான்பார்த்துகொள்கிறேன்.

[அரசனும், வசந்த சேனையும் ஒளிந்திருந்து, கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்]

வ. சே : மகாராஜா கவனிககமாட்டார்...
மனோகரனுக்கு பயப்படத் தேவையில்லை
(அரசர் பத்மாமீது சந்தேகம்கொண்டு திரும்புகிறார்)
[தனியிடத்தில்]

அரசர் :(நிலவைப் பார்த்தபடி) களங்கம்...களங்கம் ! என் பரம்பரையிலேயே இல்லாத களங்கம் ! பாதகி !

[பக்கத்திலிருந்த பத்மாவதியின் சிலையை உடைத்தெறிகிறார்.]

வ. சே : ப்ரபு ! அமைதியாக இருங்கள்...

அர : அமைதி ! அவளுடைய சாவிலேதான் எனக்கு அமைதி !

வ. சே.: இதைக் கேளுங்கள் மகாராஜா ! மகாராணி......

அர : மகாராணி......மறுபடியும் சொல்லாதே ! மானமிழந்தவள் ! நாடோடி....வேசி ! வசந்தி ! நீயே உத்திரவிடு ! அவளைப் பாதாள சிறையில் போடவேண்டும்.

வ. சே : ராணியைச் சிறையில் போடுவதால் உங்கள் ஆத்திரம் அடங்கும். வசந்த விழாவில் தாயைக் குறை கூறினேன் என்று தாண்டி விழுந்தானே, மனோகரன் ! இப்போது என்ன சொல்கிறான் ? மன்னிப்பு கேட்டுக்கொள்வானா என்னிடம்...

அர : கேட்கச் சொல்லுகிறேன்...உன்னை எதிர்த்துப் பேசியதற்கு கொலு மண்டபத்திலேயே மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறேன். பத்மாவதிக்குச் சிறைச்சாலை ! மனோகரன் வசந்த சேனையிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்......

* * *

பத்மாவதியின் அறை.

மனோ: மாதா சிறை செல்ல வேண்டும்... மனோகரன் மன்னிப்பு கேட்கவேண்டும்!

ராஜப்பிரியன்: அதுவும் கொலு மண்டபத்தில்; அந்தக் குப்பை மேட்டுக் கோட்டானிடம்!

மனோ: ஆணையிடுவது தந்தை!

பத்: ஆமாம் கண்ணே! அதை மறந்துவிடாதே, உன்னைப் பெற்ற தந்தை.

ராஜப்: தந்தை...அஞ்சா நெஞ்சனை மகனாகப் பெற்றார்... அருங் குணவதியை மனைவியாகப் பெற்றார்...அவர் பெற மறந்தது ஒன்றுண்டு, தாயே! அறிவு! அறிவு! அதைத் தான் பெற மறந்தார்!

மனோ: மறந்ததை நினைவூட்டுகிறேன்...

பத்: உன்னால் முடியாது என்று சொல்கிறேன் தங்கமே! அவசரத்தில் அப்பா தவறியிருக்கலாம்...எதற்கும் நீ போய் காரணம் கேள்!

மனோ: காரணம் கேட்பதா?

விஜயா: அத்தே... வேண்டாம்... அவரை அனுப்பாதீர்கள்...வேண்டாம் அத்தே ..அனுப்பாதீர்கள்...வேண்டாம் அத்தே...அத்தான் நீங்கள் போக வேண்டாம்...

பத்: வீரமகனே...போய்வா...

விஜ: வேண்டாம் அத்தே!

பத்: விஜயா!

மனோ: போய் வருகிறேன் [பத்மாவதியைக் கைது செய்ய வந்திருக்கும் சிப்பாய்களை நோக்கி] ஜாக்ரதை! நான் திரும்பும் வரையில் நெருங்கக்கூடாது, என் அன்னையிடம்...

[விஜயாவை நோக்கி]

விஜயா! பார்த்துக்கொள்...வருகிறேன்

* * *

அரசர் அவைக்கூடம்

ராஜப்பிரியன்: புயல் வீசப்போகிறது மன்னவரே! புழுதி மேடாகப் போகிறது இந்த அரண்மனை!

அர: ராஜப்பிரியா!

ராஜ: அரசர் விடுத்த அவசர ஆணை கேட்டு அடலேறு போல வந்துகொண்டிருக்கிறான் மனோகரன்!

அரசர் : ஆ!

ராஜப் : அமைதியாகத்தான் வருகிறான். ஆனால் எரிமலை குமுறுவதற்குமுன் எச்சரிக்கை செய்வதில்லை மகாராணிக்கு சிறைச்சாலை. மனோகரன் மன்னிப்புக் கேட்க வேண்டும்!
வேந்தே. வேங்கையிடம் விஷமம் காட்டலாமா? வீரன சினந்தால் விபரீதம் ஏற்படுமே! திரும்பப் பெறுங்கள் உத்திரவை! இல்லையேல் தீப்பொறி கிளம்பும்! தீப்பொறி கிளம்பும்!

(வசந்தி நடுங்குதல்)

அரசர் : பயப்படாதே!

பார்க்கிறேன் அந்த தீப்பொறியை! உம் அவனை இரும்பு சங்கிலியால் பிணைத்து அழைத்து வாருங்கள்.

சிப்பாய் : (மனோகரனிடம்) மன்னரின் ஆணை... இந்த சங்கிலியால் பிணைத்து தங்களை சபைக்கு அழைத்து வர வேண்டும்.

மனோ : விலங்கா?

* * *

பத்மாவதி : விலங்கா! விபரீதம்தான். (தோழியிடம்) எடு என் மேலங்கியை!

(ஓடி வருகிறாள்)

* * *

சத்திய : மனோகரா! நீ சபைக்குச் செல்வது காரணம் கேட்க. அதற்கு எப்படிச் சென்றால் என்ன? விலங்கு கைகளுக்கே தவிர வாய்க்கு அல்லவே! (விலங்குடன் மனோகரன் இழுத்துவரப்படுதல்)

* * *

அரசர் : மனோகரா! உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?

மனோ : திருத்திக் கொள்ளுங்கள் தயவு செய்து.
அழைத்து வரவில்லை. இழுத்துவரச் செய்திருக்கிறீர்கள்,

அரசர் : என் கட்டளையைத் தெரிந்து கொண்டிருப்பாய் நீ

**மனோ:** கட்டளையா இது? கரைகாண முடியாத ஆசை! பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே! முத்தே! தமிழ்ப் பண்ணே! என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே...சந்தனத் தொட்டிலிலே! வீரனே! என் விழி நிறைந்தவனே தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டி பாராட்டினீர்களோ... அவனை அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?

**சபையோர்:** த்ச...த்ச...

**அரசர்:** நீ நீதியின் முன்னே நிற்கும் குற்றவாளி, தந்தையின் முன் தனயனல்ல இப்போது!

**மனோ:** குற்றவாளி! ஹூம் யாருக்கு என்ன தீங்கிழைத்தேன்? என்னால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? அரசே! தந்தையின் முன் தனயனாக அல்ல. பிரஜைகளில் ஒருவனாகவே கேட்கிறேன். கொலை செய்தேனா? கொள்ளையடித்தேனா?... நாட்டைக் கவிழ்க்கும் குள்ள நரி வேலை தான் செய்தேனா?

குற்றம் என்ன செய்தேன் கொற்றவனே குற்றம் என்ன செய்தேன்? கூறமாட்டீர்களா? நீங்கள் கூற வேண்டாம்.

இதோ...அறங்கூறும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். மறவர் குடிப் பிறந்த மா வீரர்கள் இருக்கிறார்கள்! மக்களின பிரதிநிதிகள்! இந்த நாட்டின் குரல்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறட்டும்...என்ன குற்றம் செய்தேன்?

**சபையோர்:** குற்றத்தை மகாராஜா கூறத்தான் வேண்டும்.

**அரசர்:** இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாதது.

**மனோ:** சம்பந்தம் இல்லாதது சபைக்கு வருவானேன்? குடும்பத் தகராறு கொலு மண்டபத்துக்கு வரும் விசித்திரத்தை சரித்திரம் இன்றுதான் முதன் முதலாக சந்திக்கிறது மகாராஜா!

அரச: போதும் நிறுத்து... வசந்த விழாவில் நீ செய்த தவறுக்காக வசந்தசேனையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மனோ: அதற்குத்தான் காரணம் கேட்கிறேன்!

அர: எதிர்த்துப் பேசுபவர்களுக்கு ராஜ சபையில் என்ன தண்டனை தெரியுமா?

மனோ: முறைப்படி மணந்த ராணிக்கு சிறைத் தண்டனை அளித்துவிட்டு, சூழலயில் கிடந்ததற்கு முடி சூட்டியவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையைவிடக் குறைவானதுதான்.

அர: ஆத்திரத்தைக் கிளப்பாதே! நிறைவேற்று அரசன் உத்திரவு—

மனோ: அரசன் உத்திரவென்ன? ஆண்டவனின் உத்திரவுக்கே காரணம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அரசே! "சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும் தாய்" என்று கேள்விப்பட்டபின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை!

அர: தாய்க்கும் தந்தைக்கும் வேற்றுமை அறியா மூடனே! தந்தையின் ஆணை கேட்டு தாயாரின் தலையை வெட்டி யெறிந்த பரசுராமனைப்பற்றி கேள்விப் பட்டிருக்கிறாயா நீ?

மனோ: பரசுராமன்—அவதாரம்.
மனோகரன்—மனிதன்!

அர: என் உத்தரவை நிறைவேற்றப் போகிறாயா இல்லையா?

மனோ: நிறைவேற்றுகிறேன்—மன்னிப்பு கேட்க வேண்டும்—மனோகரன.

அர: ஆமாம்; அதுவும் அரை நொடியில்

மனோ: அரை நொடியென்ன? அதற்குள்ளாகவே! ஆனால் யாரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் தெரியுமா? கோமளவல்லி—கோமேதகச் சிலை—கூவும் குயில்— குதிக்கும் மான் என்றெல்லாம் உம்மால் புகழப்படும் இந்தக் கோணல் புத்திக்காரியின் கொள்ளிக் கண்களை—கொடிய நாக்கை—என் கூர்வாளுக்கு இரையாகத் தந்துவிட்டு—அதை எதிர்த்தால் உம்மையும், உமக்குப் பக்கத் துணை வந்தால் அந்தப் பட்டா

ளத்தையும் பிணமாக்கிவிட்டு...சூன்யக்காரிக்கு ஆலவட்டம் சுற்றியவர்களை—சுடுகாட்டுக்கனுப்பி விட்டேன்...என்று சுழலும் வாளுடன்...சூழும் புகழுடன் என் அன்னையிடம் ஓடி மன்னிப்புக் கேட்க வேண்டும். நிறைவேற்றட்டுமா—அந்த உத்திரவை?......தயார் தானு...? தயார்தானு?...

ஏன் நடுங்க வேண்டும். ஹ...ஹ...ஹ புருஷோத்தமர் போரிலே புலி – வாள் எடுத்தால் வையம் கலங்கும். அவரா இப்படி பயப்படுகிறுர்? பாவம் வேலின் கூர்மையை சோதித்த விரல்கள, வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக்கொண்டிருக்கின்றன, பாசறையைப பார்வையிட்ட கண்கள் இந்தப் பாம்பாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக் கிடக்கின்றன. கோட்டை கொத்தளங்களை நினைத்துக் கிடந்த நெஞ்சம், இந்தக் குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா குளிர்ச்சி காணுகிறது?...—

அர: பேசாதே!

மனே: ஊர் பேசுகிறது...உலகம் பேசுகிறது!

அர: ஆமாம் நீ வேசி மகன் என்று

மனே: ஆ!

அர: ஏன் கேட்பதற்கு தித்திக்கிறதோ? ஆயிரம் முறை சொல்வேன் நீ வேசி மகன்!

மனே: ஹா...அம்மா,
போதும் உம் பேச்சு. இதோ! அந்த வாயை சுக்கு நூருக கிழிக்கிறேன்.

[சங்கிலி அறுபடுதல்]

சத். சீல: மனேகரா!

மனே: யாரும் குறுக்கிடாதீர்கள். மனேகரனின் ஆத்திரம் நல்லவர் கெட்டவர் என்றுகூட பார்க்காது. விடும என்னை எடும் கையை.

மனே: புருஷோத்தமரே! புரட்டுக்காரியின் உருட்டும விழியில் உலகத்தைக் காண்பவரே! மானமொன்றே நல்வாழவெனக் கொண்டு வாழ்ந்த மறவேந்தர் பரம்பரையில் மாசாக வந்தவரே! மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம் தெரியாத மதிவாணரே! குளிர் நிலவைக்

கொள்ளிக்கட்டையெனக் கூறிய குருடரே; என் தாய் அன்பின் பிறப்பிடம்—அறநெறியின் இருப்பிடம்—கருணை வடிவம்— கற்பின் - திருவுருவம்—மாசற்ற மாணிக்கம்— மாற்றுக குறையாத் தங்கம்—அவர்களை அவதூறு கூறிய உமது அங்கங்களை பிளந்தெறிவேன்! இந்த துரோகப் பேச்சுக்கு உம்மைத் தூண்டிவிட்ட துர்த்தையின் உடலைத் துண்டாடுவேன். துணிவிருந்தால்—தோளிலே வலுவிருந்தால் எடுத்துக் கொள்ளும் உமது வாளை—தடுத்துக் கொள்ளும் உமது சாவை! தைர்யமில்லாவிட்டால்—தளுக்குக்காரியின் குலுக்குச் சிரிப்பிலே நீர் கோழையாகி விட்டிருந்தால் ஓடிவிடும் இதைவிட்டு! புறமுதுகு காட்டி ஓடும்! புறநானூற்றின் பெருமையை மூடவந்த புழுதிக் காற்றே! புறமுதுகு காட்டி ஓடும்! கலிங்கத்துப் பரணியை மறைக்க வந்த காரிருளே! கால் பிடரியில் இடிபட ஓடும்......ஓடும்...ஓடும்...ஓலமிட்டு ஓடும் ..... ஓங்காரக் கூச்சலிட்டு ஓடும்...என் அவமானமாயிருக்கிறதா?

என் அன்னையைத் தூஷித்த சின்னஞ்சிறு புழுவே... ஏன் சிலையாக மாறிவிட்டீர்? ஏ, ராஜவிக்ரகமே: பழி வாங்கும் பக்தன் பூஜைசெய்ய வந்திருக்கிறேன்! அப்படியே நில்லும்! அசையாமல் நில்லும்! இந்த சித்து வேலைக்காரியின் ரத்தத்தை மொண்டு உமக்கு அபிஷேகம் செய்விக்கிறேன். இந்த நாசகாரியின் நரம்புகளால் உமக்கு மாலை சூட்டுகிறேன், முல்லைச் சிரிப்டென புகழ்வீரே, மோக போதையில்! அந்தப் பல்லை யெடுத்து உம்மை அர்ச்சனை செய்கிறேன்! பாவி... . பார்...பத்தினியை இகழ்ந்த படுபாவி பார்! நீயும் உன் பஞ்சணை ராணியும் படும் பாட்டைப் பார்!

**பத்மாவதி:** [வந்துகொண்டே] விடு வாளை!

**மனோ:** யார், நீ?...(திகைத்தபடி) அம்மா! அம்மா! நீங்கள் எங்கே அம்மா வந்தீர்கள்? கயமைத்தனம் ஆட்சி புரியும் இந்த இடத்திலே உங்கள் தூய்மையான காலடிகள் படக்கூடாதே, அம்மா!

**பத்:** மனோகரா!

மனோ : சற்று பொறுங்கள் தாயே! (அரசரைப் பார்த்து) எங்கே ஓடப் பார்க்கிறீர்கள்? நில்லுங்கள்,

பத் : மனோகரா! உன்னையும் மறந்து விடாதே!

மனோ : அம்மா சற்றுமுன் இந்தக் கொலு மண்டபத்திலே தங்களைப்பற்றி ஒலித்த கொடிய வார்த்தைகளை தாங்கள் கேட்டிருந்தால் இப்படி சொல்லமாட்டீர்கள். இருங்கள் வருகிறேன்.

[மனோகரன் வாளை உருவுகிறான். அதை பத்மாவதி தடுக்க அது அவள் கையைக் கிழிக்கிறது.]

மனோ : அம்மா! பாதகமில்லை. உங்கள் புனிதப் பொற் கரத்திலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும், இந்தப் பொல்லாதவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

பத் : மனோகரா! என்னைத்தானே இகழ்ந்தார்கள்?

மனோ : விடுங்கள்! தாயை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்.

பத் : மனோகரா! நீ என் மகன் என்பது உண்மையானால் சொல்வதைக் கேள்.

மனோ : அம்மா.

பத் : முதலில் நீ வளர்ந்த இந்த வயிற்றிலே வாளைப் பாய்ச்சிவிட்டு பிறகு மகாராஜாவிடம் போ! தாயின் பிணத்தின் மேல் நின்றுகொண்டு, தந்தையிடம் போரிடு. உம்...இதோ உன் தாய்...கொல் என்னை. பிறகு உன் கொள்கைப்படி நட....ஏன் நிற்கிறாய்?

மனோ : அம்மா!...

பத் : இனி நான் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. யாரை நாளை வந்து பார்க்க மாட்டேன என்று சத்தியம் செய்திருந்தேனோ, அவரை உன்னால் பார்க்க நேர்ந்ததும், சபையில் இப்படி பெற்ற மகனிடம் பிச்சைக் கேட்பதும் சகிக்க முடியாத அவமானம்!

மனோ : இப்போது என்னம்மா செய்யச் சொல்கிறீர்கள்?

பத் : வாளை இப்படிக் கொடு!

மனோ : மன்னிப்பும் கேட்கட்டுமா?

பத் : மனோகரா! என் மாணிக்கமே! உன் மாதா கோழை யின் குடும்பத்தில் பிறக்கவும் இல்லை. கோழையின் மனைவியாக ஆகவும் இல்லை. கோழையை மகனாகப் பெறவும் இல்லையடா கண்ணே! மன்னிப்புக் கேட்பதைவிட மரணமடைவதே மேல்.

அரசன் : ஆமாம்; அதுதான் என் முடிவும். இந்தக் கொடியவனை உயிரோடுவிடக் கூடாது. மனோகரனுக்கு மரண தண்டனை!

மனோ : ஹா! அம்மா!...

இப்போதாவது அனுமதி கொடுங்களம்மா. இந்த நீசர்களைக் கசக்கி எறிந்து விடுகிறேன். இன்னுமா அம்மா பொறுமை?

பத் : இப்போதுதான் பொறுமை!

மனோ: அப்படியானால் நான்?

பத் : சாகத்தான் வேண்டும்.

மனோ : நானா சாக வேண்டும்? உங்கள் மகன் மனோகரனா சாகவேண்டும்?

பத் : ஆமாம்! யாருக்கும் கிடைக்க முடியாத பாக்கியம்; தந்தையே மகனைக் கொல்வது! அதற்கு தாயாரும் தலையசைப்பது, தங்கமே, இந்த தரணியிலே யாருக் கடா கிடைக்கும் இந்த ராஜ பாக்கியம்! போ, மகனே சாகப் போ!

மனோ : அம்மா! நீங்களா இப்படி சொல்கிறீர்கள்?

பத் : ஆம்! உனனை ஈன்ற தாய்! நானே சொல்கிறேன்! இறந்துவிடு!

மனோ : அம்மா உங்களைப் பிரிந்தா?

பத் : நானே உன்னைப பிரிய துணிந்துவிட்டேன.

மனோ : அம்மா! அம்மா!

[மனோகரன் மயக்கத்தோடு தரையில் சாய்கிறான்]

(சபையோர்)

"இளவரசனை விடுதலை செய்யுங்கள்."

"அநீதியான தீர்ப்பு."

"அநீதியான தீர்ப்பு! அநீதியான தீர்ப்பு."

பத்மா: அமைதியாயிருங்கள்! சத்தியசீலரே! மனோகரனைத் தூக்கிக்கொண்டு போக ஏற்பாடு செய்யுங்கள்—கொலைக்களத்திற்கு!

சபையோர்: "கூடாது!!"

"தீர்ப்பு அக்ரமம்...அக்ரமம்!"

பத்: யாரும் பேசாதீர்கள் என் மகன் — அவனை என் இஷ்டப்படி நடத்துவேன்! மரண தண்டனை நிறைவேறிய பிறகு சவ அடக்கம்கூட இந்த சாம்ராஜ்யத்திற்கு வெளியில்தான நடைபெறவேண்டும்!

[மனோகரன் கையை எடுத்து]

செல்வா! இதுவே என் கடைசி முத்தமாயிருந்தால் அடுத்தபடி நம் கல்லறைகள் சந்திக்கட்டும்!

(போய்விடுகிறாள்)

* * *

[அரசனின் தனியிடம்: விஜயா ஓடிவந்து அரசன் காலில் விழுகிறாள்.]

விஜயா: மாமா......மலர்ந்திருந்த ரோஜாவின் இதழ்களை ஏன் மாமா பிய்த்தெறிந்தீர்கள்... படர்ந்திருந்த மல்லிகையின் பச்சைக் கிளையை ஏன் மாமா வெட்டிவிட்டீர்கள்... தொடர்ந்து வந்தேன் தூய நற்காதலால்...... துன்ப அலைகளிலே ஏன் மாமா தள்ளிவிட்டீர்கள்... சொல்லுங்கள் மாமா இனி என் வாழ்வு பாலைவனந்தானா?........ என் இருதயம் இருட்டறைதானா? விமோசனமே கிடையாதா மாமா?......

அரசன்: தீர்ந்துபோன விஷயம் திரும்பக் கிளறுவதில் பயனில்லை.

விஜயா: எது மாமா தீர்ந்துபோன விஷயம். தந்தை மகன் - என்ற பந்தமா?......கணவன் மனைவி என்ற சொந்தமா? தங்களைப் பொறுத்த வரையில் இரண்டுமே தீர்ந்துவிட்டாலும், என் நிலையிலேயிருந்து நினைத்துப்பாருங்கள்; நான் உங்கள் பகைவரின் மகள். என் உள்ளத்தைக் கவர்ந்த உத்தமர் உங்கள் மகன். எதிரியையும் இழக்கக்கூடிய இதயம் படைத்தவரை இத்தகைய கொடுமைக்கு ஆளாக்குவது, அதுவும் தந்தையே செய்வது விந்தையல்லவா, மாமா? பாண்டிய நாட்டு ராஜகுமாரி சோழநாட்டு

அரண்மனைக்கு ஏன் வந்தாள்...........சோகப் பதுமையாக மாறவா...? சுகத்தை இழக்கவா? சொல்லுங்கள் மாமா.

வ. சே.: மாமியார் பாடம் அப்படியே மருமகளுக்கு!
[வந்துகொண்டே]

விஜயா: என் மாமாவோடு பேசுகிறேன்...

வசந்தி: மாமா...உனக்கு மகாராஜா மாமா...அந்த சந்தேகத்தில் வந்தது தாண்டி இவ்வளவு சங்கடமும்!

விஜயா: சீ...பேசாதே வேசி...

வசந்தி: என்ன சொன்னாய்...வேசியின் மகனுக்கு மனைவியாக வாய்த்த வேசி...என்ன சொன்னாய்...

விஜயா: ஆ...வசந்த சேனை...
[கட்டாரியை வீசுகிறாள்..... குறி தவறுகிறது.]

வசந்தி: கற்புக்கரசிகளை கட்டாரி மட்டுமில்லை... கடவுளே கூட நெருங்க முடியாது!...

அரசன்: வசந்தி!...
[விஜயாவைப் பார்த்து] ...
பாபி!... என் ஆசைகளை அரைநொடியில் அழித்து விடப் பார்த்தாயே...

வசந்தி: சதி நடக்கிறது மகாராஜா என்னை சாய்க்க!...

அரசன்: பயப்படாதே...சதிக்கு முடிவு கட்டுகிறேன்...... யாரங்கே? [காவலன் வருதல்] பத்மாவதியுடன், விஜயாவையும்—பாதாள சிறையிலே அடையுங்கள்... உம்... நடக்கட்டும்...

விஜயா: மாமா...

[மயக்கமுற்ற நிலையில் மனோகரன் ஒரு ரதத்தில் எடுத்துச் செல்லப்படுகிறான். சத்யசீலரும், காவலாளிகளும் பின் தொடர!]

[அப்போது அரூபம் (கேசரிவர்மன் ரதத்தைத் தடுத்து நிறுத்துகிறது. காவலாளிகள் பயந்து ஓடுகிறார்கள். அரூபம் ரதத்தை ஓட்டிச் செல்கிறது. ராஜப்பிரியன் பின் தொடர்கிறான்.

(அரண்மனை)

காவலாளி : மகாராஜா ! இளவரசர் தப்பிவிட்டார்.

அரசர் : என்ன ?

வ. சே : ஆ ! மனோகரன் தப்பிவிட்டானா ?

காவலாளி : ஆமாங்க.... யாரோ கட்டுகளை அவுத்து காப்பாற்றினார்கள், கண்ணுக்கே தெரியவில்லை.

வ. சே : விபரீதம்வளர ஆரம்பித்துவிட்டது பிரபு ! நகர் முழுவதும் சோதனை போடுங்கள், அந்த நாசகாரன் எங்கிருந்தாலும் பிடித்து வாருங்கள்.

அரசர் : உம்...போங்கள்.

[குகை : மனோகரன் மயக்கம் தெளிந்து கண் விழிக்கிறான்.]

மனோகரன் : முடியாதம்மா... முடியாது... (சுற்றிலும் பார்த்தபடி) என்ன இது... கொல்லப்பட்ட நான் உயிரோடு...

கேசரிவர்மன் : இளவரசே !

மனோ : யார் நீ... நீ யார்... சத்யசீலரே ! யார் இவன் ?

சத்யசீலர் : விபரம் பிறகு சொல்கிறேன்... அவன்தான் உன்னைக் காப்பாற்றியவன்.

மனோ : என்னைக் காப்பாற்றுவது...... மனோகரனைக் காப்பாற்றுவது... மன்னன் ஆசை... மாதாவின் அன்புக் கட்டளை..., இவைகளை உடன் நிறைவேற்றுங்கள்... கொல்லுங்கள்... என்னைக் கொல்லுங்கள் ...கொல்லுங்கள் ராஜப்பிரியா ! என் அன்புத் தோழா... என் அன்னையின் கட்டளையை நீயாவது நிறைவேற்று.

சத்ய : பொறு மனோகரா !

ராஜப் ; மனோகரா .. தாய்சொல் தவறக் கூடாது என்பதற்காக சிறை வாசத்திலிருக்கும் தாயை அனாதையாகச் சாகவிடுவதா ?

மனோ : ஆ ! அம்மா சிறையில்...

ராஜப் : அம்மா மட்டுமல்ல... விஜயா கூட...

மனோ : ஆ...

ராஜப் : இப்போதாவது தெரிந்துகொள...... நீ வாழ வேண்டிய அவசியத்தை.

* * *

(சிறைச்சாலை)

விஜயா : வாள் முனையால், தன்னுயிரையும் மன்னுயிரையும் காத்திடும் வலிமை வாய்ந்தவர் கடைசியில் தப்பி ஓடி உயிர் பிழைத்தார். எல்லாம் உங்கள் நல்லெண்ணத்தால் வந்த நாசந்தான் அத்தே! அவர் எங்கு சென்றாரோ? எப்படி அலைகிறாரோ!

பத்மாவதி : சாப்பிடு விஜயா...

விஜயா : வேண்டாம் அத்தே!

பத் : கர்ப்பவதி சாப்பிடாமல் இருக்கக் கூடாது. வயிற்றில் வளரும் கருவுக்காகவாவது சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும்... சாப்பிடு...

விஜயா : அத்தே... இந்தக் கஞ்சியா...

* * *

வ. சே : அருமையாயிருக்கிறது...

தோழி : இந்தப் பழரசம உடம்பைப் பளபளப்பாக்கும்...

வ. சே : தெரிந்துதானடி இதைத் தேர்ந்தெடுத்தேன், மாலினி! எங்கேயோ ஒரு அழகி இருந்தாளாம்; அவள் மேனியின் மெருகு குலையாமலிருக்க கழுதைப் பாலிலே ஸ்நானம் செய்வாளாம்...

தோழி : இதென்னம்மா அதிசயம்... நீங்கள் கேட்டால் புருஷோத்தமர் புலிப்பால் கூட கொண்டு வருவாரே....

வ. சே : சந்தேகமென்னடி அதிலே?

தோழி : அதிருக்கட்டும்... நீங்கள் இப்படி அலட்சியமாகயிருக்கிறீர்களே... மனோகரன் வேறு தப்பிவிட்டான். வசந்தன முடி சூட்டு விழாவை சீக்கிரம் நடத்திவிட வேண்டாமா?

வ. சே : இது என்னடி பெரிய காரியம், வேந்தனின் வேத புத்தகமே நான்தான். வெண்ணிலவை சூரியன் என்றால் அவர் நம்பித்தான் தீருவார்... கவலைப் படாதே! ஒரு கண்ணசைவில் முடிந்துவிடும் வசந்தனின் பட்டாபிஷேகம்!

* * *

வைத்தியர் : ராஜாதி ராஜ... ராஜமார்த்தாண்ட

விகடன : ராஜ கம்பிர... ராஜகோலாஹல...

வைத் : ராஜவீர தீர பராக்கிரம...

விக : ரணரங்க தீர வீர சூர...

வைத் : உப்பில்லாம கலக்கஞ்சி குடிக்கும் வசந்த மகா ராஜா பராக்! பராக் !

வசந் : தோம்... தோம்... வந்தோம்......

விகடன் : வசந்தா ! இதோ பாரு...அம்மா திட்டு வாங்க எழுந்திரு... தர்பார் மாதிரியே இருக்கணும்... ..நான் சொல்றபடி செய்யணும்...உம்...இதிலே உட்காருங்க மகாராஜா !

: இப்ப நான் சொல்றபடி சொல்லணும்......

விக : இப்ப நீங்க யாரு ?

வசந்தன் : இப்ப நீங்க யாரு ?

விக : த்ச்...பதில் சொல்லுங்க...

வச : த்ச்...பதில் சொல்லுங்க...

விக : அடடா...பதில் சொல்லுங்க, மகாராஜா ?

வச : அடடா...பதில் சொல்லுங்க மகாராஜா !

விக : பதில் சொல்லணும் "மகாராஜா" அப்படீன்னு !

வச : உம்...சரி...சரி...மகாராஜா !

விக : ஆ...நான் தான் மந்திரி !

வச : உம்...

விகட : இவரு (வைத்யரைக் காட்டி)

வச : தெரியும்...தெரியும்......மகாராணி ......வா...வா... உக்காரு...

விக : மகாராஜா......அவரு சேனாதிபதி......இப்ப யாரு மகாராணி ?

வைத் : அதோ...மாலினியை வைச்சுக்கலாம்...வா...

விக : (மாலினியைப் பார்த்து) நான் சொல்றபடி கொஞ் சம் கேளேன்...இன்னைக்கு மட்டும் நீ மகாராணி... மகாராஜாவோட போயி உட்காரு...

வச : [இளிக்கிறான்]... சபாஷ்...

விகடன் : அடுத்த நாட்டு அரசர் யாராவது, சந்தோஷ மாக வந்தால் சந்தோஷமாக பேசவேண்டும், கோப மாக வந்தால் கோபமாக பேச வேண்டும்...

வச : சரி !...மந்திரி !...

விக ; உம—தர்பார் ஆரம்பமாகலாம்...

வச : சேனாதிபதி ! நடனம் நடக்கட்டும்...

வைத்யன் : மகாராணியை ஆடச் சொல்லுங்கள்...

விக : ஆமாம் அரசே! வேற ஆளில்லை பாருங்க... அதனாலே ஆடட்டும்!

[மாலினி ஆடுகிறாள்]

வச : உம்...ஆடு! நம் நாட்டில் எல்லோரும் சமத்துவம்... எல்லோரும் ஆடலாம்...நடனமாடத் தெரியாதவர்கள் பெண்களே அல்ல! சரிதானே விகடா

விக : இப்போது பெண்கள் நடப்பதே ஒரு நடனமாத் தானே இருக்கு!

[புருஷோத்தமர் வருகிறார்]

வச : ஓகோ! அடுத்த நாட்டு அரசரா?...சந்தோஷமாய் வருகிறீரா? கோபமாய் வருகிறீரா?...

புருஷோத் : போதுமடா...சும்மா இரு...

வச : ஓ! கோபமாய் வந்திருக்கிறார்...ஓய்!..மூளையில்லாத ராஜரே!...முட்டாள அரசரே!...எங்கே வந்தீர்? வந்த காரியத்தைச் சொல்லும்...வசந்தனுடைய தர்பாரிலே வரக் காரணம் என்ன?...
மந்திரி!...போதுமா கோபம்!...

அரசர் : ஏ, விகடா இது என்னடா கூத்து!...

விக : முடிசூட்டு விழா...ஒத்திகை நடத்திக் காட்டச் சொன்னார்கள் அம்மா!...

அர : வைத்யா! நீ என்ன மருந்து கொடுத்து பைத்யத்தை தெளிய வைக்கிறாயா இல்லை!...

வச : பைத்யமா?...யார் சொன்னது? இது தீராத வியாதி!...

* * *

[நந்தவனம்]

வசந்தி : வந்துவிட்டீர்களா ஸ்வாமி, நான் சோலைப் பாதையில் காத்துக் கிடந்தேன்—தாங்கள் மாளிகை வழியே வந்திருக்கிறீர்கள்.

அர : வழி, எதுவானால் என்ன...உன் மொழியிலே, தேன் விழியிலே ஒளி மாறிவிடுகிறதா வசந்தி!

வச : எப்படி மாறும்—இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட அகல்யா—சந்திரனுக்காகப் படைக்கப்பட்ட தாரை—புருஷோத்தமருக்காகப் படைக்கப்பட்ட வசந்தா—

அர : வசந்தி ! கண்ணே...உன்னோடு என்ன பேசுவ தென்றே தெரியவில்லை—

வச : ஊமையாகவே இருங்கள்—அந்த ஒய்யாரத்தை நான் ரசிக்கிறேன்...

அர : இப்போது...நீ எது கேட்டாலும் கொடுப்பேன்—

வச : வந்தது ஆபத்து !...நான் கேட்பதாக நினைத்த தைக் கூட இப்போது கேட்கப் போவதில்லை...

அர : ஏன் வசந்தி !...

வச : சமயம் பார்த்து கேட்கிறாள் சாகசக்காரி என்பீர்கள் நானென்ன தசரதனை ஏமாற்றிய கைகேயியா ?... வேண்டாம்...வேண்டாம்...

அர : என்ன வசந்தி, கேள் !...

வச : வேண்டாம்...ஹூம் !...

அர : சரி...நான் போகிறேன்...

வச : அய்யோ !...என் உயிர் போய்விடும்—உட்காருங்கள்

அர : பிறகு...சொல்லேன்...

வச : மனோகரன் நாட்டை விட்டுப் போய் விட்டான்...

அர : அதையேன் கிளறுகிறாய்...

வச : இல்லை...இளவரசன் இல்லாத நாடு...எழிலில்லாத ஓவியம் போலத்தானே !...

அர : அதற்கென்ன செய்வது...

வச : ஏன், நம் வசந்தனை இளவரசனாக்கிவிட்டால்...

அர : பைத்யம் ! வசந்தனைவிட நீ பெரிய பைத்யம் !...

வச : ஸ்வாமி !...

அர ; அவனை இளவரசனுக்கக் கூடாது !...பைத்யக் காரர்களுக்குத் தலைவனாக பட்டம் கட்ட வேண்டும்— அவனுக்கு முடி சூட்டினால்....முதலில் நீ பைத்யம்— பிறகு நான் பைத்யம்—அப்புறம் இந்த நாடே பைத்யம்...

வச ; போதும்...போதும் !......வர்ணிக்காதீர்கள்—வசந்த சேனைக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்—

அர ; உன்னை...அறிவாளி என்று நினைத்தேன்...[கோப மாக] நீ ஒரு ஞான சூன்யம் !

வச ; (தந்திரமாக) முட்டாள் என்று மூவாயிரம் முறை சொல்லுங்கள்—சந்தோஷம் !...ஆனால்...உங்கள் வசந்தி வஞ்சகி என்று மாத்திரம் நினைக்காதீர்கள்... ஸ்வாமி !... ஒரு யோசனைதான் உங்களைக் கேட்டேன்—என் மகன்மட்டு மல்லவே அவன்—தங்கள் மகனுந் தான்—தங்களை விட எனக்கென்ன ஆசை வந்து கிடக்கிறது ! என் லட்சியம் தங்கள் சுகம்...சுயநலமல்ல...

அர ; எனக்குத் தெரியாதா கண்ணே ! ஆனால் வசந்தன்!

வச : அந்த பேச்சு வேண்டாம்—விபரீதப் பேச்சு !... பைத்யத்துக்கு பட்டம் சூட்டினால்...என்ன ஆகுமென்று எனக்கும் தெரியும்...உங்களை இண்டல் செய்தேன். நீங்கள் அதற்குள்....க்கும் !

அர ! வசந்தி !...

வச :ப்ரபூ !...நிலாமுற்றம் தேடுகிறது— வாருங்கள்...

வசந்தசேனை மனதிற்குள் : "இனி புருஷோத்தமனை நம்பி புண்யமில்லை—புதிய திட்டம் போடவேண்டும். நன்றி கெட்ட இந்த ராஜனை நாடு கடத்த வேண்டும்...மனோகரனைக் கொல்ல வேண்டும்...வசந்தனுக்கு பட்டம் கட்ட வேண்டும். இதற்கெல்லாம் உதவி செய்யக் கூடியவன் என் பழைய காதலன் உக்ரசேனன்தான்" வசந்தசேனை அறைக்குள் போகிறாள் வசந்தன் பின் தொடர்கிறான்.

[வசந்தசேனை கடிதம் எழுதுகிறாள். அருபம் பின் தொடர்கிறது, வசந்தசேனை நடுங்கிக் கொண்டு.]

வ. சே ; யாரங்கே ! ஒரு கொடியவன் உள்ளே ஒக்கியிருக்கிறான். விடாதீர்கள் அவனை !

[அருபம் வசந்தனை அழைக்கிறது]

வச : நீ பிசாசா ? கடவுளா ?

அருபம் : இல்லை வசந்தா ...நான் மனிதன்.

வச ! மனுஷனா? என் கண்ணுக்கு தெரியலையே.

அரு ; தெரியமாட்டேன் ! என் அய்யன் குருநாதன் அருள் அறிவின் விளைவு. ஒரு மருந்தின் வேலை,

வச ! அந்த மருந்தை எனக்கு கொஞ்சம் தர்ரியா ?

அரு: தருகிறேன்! ஆனால் நீ நான் சொல்றபடி கேட்க வேண்டும்.

அரு: முதலில் ஒரு சிப்பாயை வரச் சொல்...

[விகடன் அழைக்க சிப்பாய் ஒருவன் வருகிறான். அரூபம் அவனைக் கட்டிப் போட்டுவிட்டு நழுவுகிறது]

[வசந்தசேனை கடிதம் எழுதி அதைக் கூட்டிற்குள் போடுகிறாள்]

* * *

[குகை]

கேசரிவர்மன்: பழிகாரி ஓலை தயாரித்துவிட்டாள், அவள் காரியத்தை வெற்றிகரமாக்க கடைசி ஓலை கொஞ்சம் ஏமாந்தால் அதுவே நமக்கு சாவோலை ஆகிவிடும்!

சத்யசீலர்: விஷயத்தைச் சொல் வர்மா!

கே. வ: வசந்தனுக்கு முடிசூட்ட முயன்றாள் வஞ்சகி! மன்னர் மறுத்தார். ஆகவே இந்த மாநிலத்தை வசப்படுத்தி மகனை அரசனாக்க மாற்றான் உக்ரசேனனுக்கு மடல் அனுப்பியிருக்கிறாள்.

மனோ: உக்ரசேனன்! இமயபுரி வேந்தன்!

ராஜப்: ஆம்! நம் சாம்ராஜ்யத்தில் நுழைய சமயம் பார்த்திருப்பவன்.

கே. வ.: உக்ரசேனனிடமிருந்து பதில் கொண்டு வருபவன் இந்த வழியேதான் வந்தாகவேண்டும். வாருங்கள் பார்ப்போம்.

[அட்சயன் குதிரையில் வருகிறான். மனோகரன் அவனை நிறுத்தி]

மனோ: யார் நீ!

அட்: என்னையா கேட்கிறாய்? நான் நான்தான்!

வர்ம: எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?

அட்: போகவேண்டிய இடத்திற்கு!

[மனோகரனும், ராஜப்பிரியனும் அட்சயனைத் தாக்கி அவனை ஒரு கல்தூணில் கட்டிப் போடுகிறார்கள். மனோகரன் அட்சயனிடமிருந்து ஒரு கடிதத்தை எடுக்கிறான்.]

"அன்புள்ள வசந்தசேனைக்கு!

அட்சயனை துணைக்கு வைத்துக்கொண்டு அரண்மனைக்குள் ஆகவேண்டியதைக் கவனி. படைகளும் நானும் புறப்படுகிறோம். புருஷோத்தமனை தொலைப்போம். புது வாழ்வு தொடங்குவோம்.

உக்ரசேனன்."

ராஜப்: துரோகம்...விடக்கூடாது இதை!

மனோ: இப்போதே புறப்படுவோம்...அந்த வக்ரபுத்திக் காரியை கூண்டோடு அழிக்கவேண்டும்.

கே. வ.: அழித்துவிட்டால் உங்கள் வீரம் வெளிப்படும். அந்த வேசியின் வேஷம் வெளிப்படாது. இளவரசே! அரை நொடியில் சாகடிக்க அல்ல நான் இப்படியெல்லாம் இவ்வளவு காலம் ஏங்கித் திரிவது? என்றாலும் முடியும் எப்போதோ செய்திருப்பேன்.

மனோ: ஏன் செய்யவில்லை?

வர்: விவேகம் இளவரசே! விவேகம். அப்போது கொன்றிருந்தால் அந்தக் கள்ளிக்காக கண்ணை இழந்த அரசர் கண்ணீர் வடித்திருப்பார். அவள் சூழ்ச்சிகள் அம்பலமாயிருக்காது. சூதுக்களை உலகம் தெரிந்து கொண்டிருக்கமுடியாது. அவளை சாகடிப்பதில் இல்லை நம் சாமர்த்தியம். அவள் சதிகளை அம்பலப்படுத்துவதில்தான் இருக்கிறது.

மனோ: அதற்கு வழி......

வர்: முள்ளை முள் கொண்டு எடுப்பது போல சூழ்ச்சியை யால்தான் வெல்லவேண்டும். சொல்லுகிறேன் வாருங்கள்.

* * *

[அரசன் மாளிகை]

காவலன்: மகாராஜா......பைத்தியத்திற்கு வைத்தியம் பார்ப்பதில் மகா கெட்டிக்காரனும் ஒருவன்..

அர: அப்படியா!...வசந்தியிடம் அவனை அழைத்துப் போ!......

காவலன்: உத்திரவு!......

[வசந்தசேனை அந்தப்புரம் காவலன் அக்ஷயன் வேடத்தில் உள்ள மனோகரனைக் காட்டி]

காவலன் : அம்மா — இவரை மகாராஜா தங்களிடம் அனுப்பினார். பெரிய வைத்தியராம்...
வசந்தி : யார்?......
போலி அக்ஷயன் : நான் ஒரு வைத்தியன். என் பெயர்..... உக்ரசேனத் தூதன்...

[புரிந்துகொண்டு]

வசந்தி : நீளமான பெயர்...

[மனோகரன் கடிதத்தை வசந்தியிடம் நீட்டுகிறான் வசந்தி கடிதத்தைப் படித்துவிட்டு]

உமது பெயர்?
போலி அக்ஷயன் : அக்ஷயன்!
வசந்தி : அரசனை சரியானபடி ஏமாற்றியிருக்கிறீர்.
போ. அக்ஷ. : ஆமாம் — என்னை யாரென்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது...
வச : சரி...நீர், வைத்தியரைப் போலவே.........நடித்துக் கொண்டிரும் — மற்றவைகளை நான் கவனிக்கிறேன்.
போ. அக்ஷ. ; நடிப்பதா பிரமாதம்!...ஓ!...

* * *

வசந்தன் : ஏய் வைத்தியா..,மருந்து மருந்துண்ணு உயிரை வாங்குறே!
வைத் : அதுக்குத்தான் முயற்சி பண்றேன் நடக்கலியே!
வச : எதுக்கு? உயிரை வாங்கவா?
வைத் : சே...சே...ஆண்டவன் புண்யத்திலே உங்க ஆயுசும் நீடிச்சு...இந்த வியாதியும் நீடிச்சு...அடியேன் உத்தியோகமும் நீடிச்சு இருக்கணும்னு சதா எமதர்மனை பிரார்த்தனை பண்ணிக்கிட்டேயிருக்கேன்.
வச ; வைத்தியா! எமனுக்கு வாகனம் என்னடா?
விக : எருமைக்கடா! அதனாலேதான் கெட்டவுங்ககிட்டேயெல்லாம் மெதுவா வர்ரான்...
வச : ஆமாம்.. சந்தேகமில்லே...சந்தேகமில்லே—
விக : வைத்யரே...என் ஆழ்ந்த அனுதாபங்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்...
வைத் : என்ன விகடரே...
விக : நிலையில்லா வாழ்வு...இதோ...புது வைத்யர் வந்து விட்டார், வசந்தனுக்கு!

வைத் : அப்போ நான்...
விக : சற்றே விலகியிரும் பிள்ளாய்...

[அட்சயன் வடிவில் மநோகரன் வருகிறான்.]

வச : ஏ, புது வைத்யா...உனக்கு என்னென்ன தெரியும்.
அட் : மருந்து கொடுக்காமலேயே ஒரு முடிவு கட்டுவேன் வியாதியை !
வச : அப்படின்னு...நீதான் புது வைத்யன் சந்தேக மில்லே...ஏ பழைய வைத்யா நீ ஓடு...

[உக்ரசேனன் கூடாரம்]

உக்ரசேனன் : வீரசிம்ஹா! திடீரென புறப்படவேண்டி யிருக்கும்...நமது படைவீரரெல்லாம் தயார்தானே !
வீர : தயார் அரசே !
உக்ர : (ஓலையொன்றைக் கொடுத்து) புருஷோத்த மனுடைய அரண்மனையில் நுழைந்து, வசந்தசேனை யின் மூலம் இதை அக்ஷயனிடம் சேர்ப்பிக்கவேண்டும்.
வ. சே. : உக்ரசேனர் வந்துவிட்டாராம சாது வேடத்தில் வருகிறார்களாம், எல்லோரும்...
போ. அக்ஷ. : சாதுக்கள்...வேடம்...
வ. சே. : என்ன அக்ஷயா ?
போ. அக்ஷ. : ஒன்றுமில்லை. சாது வேஷத்தில்தானம்மா பல சாம்ராஜ்யங்களை கவிழ்த்திருக்கிறார்கள்...
வ. சே. : ஓகோ ! ஆமாம்...அவர்களை எப்படி அரண் மனைக்குள் அழைப்பது ?
அக்ஷ : ஆலோசிக்கவேண்டியதுதான்...
வ. சே : ஆலோசனையென்ன, அரை நொடியில் ஏற்பாடு செய்கிறேன்.

[உக்ரசேனனின சாதுக் கூட்டம் மேள வாத்தியங்களுடன் பக்தி முழக்கங்களு டன் வரவேற்கப்படுகின்றது......அரச னும், வசந்தியும் சாதுக் கூட்டத்தை பக்தி சிரத்தையுடன் மரியாதையுடன் வரவேற்று உபசரிக்கிறார்கள்.....]

அரசன் : வரவேண்டும்.....-வரவேண்டும்.......பாக்யவா னேன்.

உக்: பகவானின் பேரருள் சித்திக்கட்டும்...புருஷோத்தம ராஜன்...நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறி வார்!......

அர: உண்மை உண்மை!......

உக்: இதுதான் ராணியோ!......

அர: (தலையை அசைக்கிருன்)......

உக்: மகாலக்ஷ்மி!...கலிகால நளாயினி...ராணி......மனம் போல் வாழ்வாய்!...எண்ணங்கள் நிறைவேறும்......

வ. சே: வசந்தா...சுவாமிக்கு நமஸ்காரம் செய்!

வசந்: ஒருமையுடன் உனதுதிரு மலரடி நினைக்கிற உத்த மர் தம் உறவு வேண்டும்...விகடா பாடத்தை மறந்து விட்டேண்டா...

வ. சே.: போதும்...போதும்.

உக்ர: வாழுக! வாழ்க...... ஏ ராஜன்...நல்ல சமயத்தில் தான் நான் வந்திருக்கிறேன். உனக்கு ஒரு பெரிய ஆபத்து காத்திருக்கிறது.........

அர: ஸ்வாமி!......

உக்ர: அந்த ஆபத்திலிருந்து தப்பவேண்டுமானுல் நீயும் உன் ராணியும் இந்த க்ஷணம் முதல் நாளை காலை வரையில் பிரிந்திருக்கவேண்டும்.

அர: அப்படியா?

உக்ர: இல்லாவிட்டால் மரணம் சம்பவிக்கும்...

வச: மகாராஜாவை பிரிந்திருப்பதா?......

அர: நாளை காலை வரையில்தானே வசந்தி!...

உக்: உம் – பிரியுங்கள்...பிரியுங்கள்...

வசந்: ஞாபகம் வந்துவிட்டது உள்ளொன்று வைத்து புற மொன்று பேசுபவர் உறவு கலவாமை வேண்டும்.

வ. சே.: வசந்தா

வசந்: மருவு பெண்ணாசை மறக்கவேண்டும்.

அச: டேய்! சும்மாயிரு!

வசந்: மதி வேண்டும்...

வ. சே.: வசந்தா!

[வசந்தி போகிருள்]...

உக்ர: எல்லாம் கடவுள் செயல்! ராஜன்!...இந்த சடலம் சிறிது களைப்பாறவேண்டும்...

அர: இதோ ஏற்பாடு செய்கிறேன்......

[அரசன் போகிறான். சாது வேடத்தி லிருக்கும் உக்ரசேனனுடைய படை வீரர்கள் அரண்மனை மெங்கும் பரவி காவலாளிகளைக் கொன்று அவர்களு டைய இடத்தை ஆக்ரமித்துக்கொள் கிறார்கள்.]

* * *

[குகை]

மனோகரன்: காஷாய உடை! அதற்குள்ளே கட்க மேந்திய படை, படை திறந்தாற்போல் நுழைந்துவிட்டார்கள் ...தடை எதுவுமின்றி தபோதனர் வேடத்தில்! இனி அரைக்கணம் தாமதித்தால் சோழ மண்டலம் அடிமையாகிவிடும். உடன்புறப்படுங்கள்.

ராஜப்பிரியன்: ஆமாம், அதுதான் சரி! விடக்கூடாது, உடனே புறப்படுங்கள்.

சத்யசீலர்: பொறுங்கள். மன வலிமை இருக்கிறது. நமக்கு தாயகத்தை விடுவிக்க! அதே நேரத்தில் மாற்றாரின் படை வலிமையைப் பற்றியும் கொஞ்சம் யோசிக்கவேண்டும். இதோ ராஜப்பிரியனை உடனே பாண்டிய நாட்டுககு அனுப்புவோம். பாண்டிய நாட்டுப் படைகள் வந்துவிட்டால் நமது போராட்டத்தைத் துவங்குவோம்!

கேசரி வர்மன்: நல்ல யோசனை! இளவரசே! நீங்கள் உடனே அரண்மனைக்குச் செல்லுங்கள். அப்போது தான் அன்னை, தந்தை, மனைவி ஆகியோருக்கு எந்த வித ஆபத்தும் அணுகாமல் கண்காணித்துக்கொள்ள முடியும். மற்றவைகளை நாங்கள் கவனித்துக்கொள்ள கிறோம்!

சத்: மனோகரா! நீ உடனே புறப்படு. ராஜப்பிரியா நீ உடனே பாண்டிய நாட்டுக்குப் புறப்படு!

* * *

[பூஜை அறை]

உக்: யாரது ஒ...ராணி வசந்தா தேவியா?

வசந்: ஸ்வாமிகளுக்கு ஆண்டவன் நினைவோ?

உக் : ஆண்டவனைப்பற்றியல்ல. ஆண்டு கொண்டிருப்பவனைப்பற்றி...உட்கார். உல்லாசி.

வ. சே. : பழரசம் அருந்துங்களேன்.

உக் : முதலில் உன் பார்வை ரசம் அருந்துகிறேன் கண்ணே !

சேனு : உங்களைப்பார்த்து எவ்வளவு நாட்களாகின்றன.

தோழி : கூப்பிட்டீர்களா அம்மா.

சேனு : இல்லை போடி.

உக் : (கூந்தலைக் கோதியபடி) ஆகா! முகிற் கூட்டம்.
(பல்லைக்காட்டி) முல்லைத் தோட்டம்.
(கன்னத்தைத் தடவி) ரோஜாக் கொல்லை !

சேனு : ஸ்வாமி !

உக் : மொத்தத்தில் இன்பத்தின் எல்லை !

சேனு : ஆமாம்...திட்டங்கள் எல்லாம் எப்படி தீட்டியிருக்கிறீர்கள் ?

உக் : திவ்யமாக ! அரண்மனையின் முக்கிய பகுதிகள் எல்லாம் நமது ஆண்டி வேடந்தரித்த வீரர்கள் ஆக்ரமித்துக்கொண்டிருக்கிறார்கள், நாம் ஆணையிட்டால் போதும். போர் ! புருஷோத்தமன் கைது !

சேனு : போர்கூட தேவைப்படாது. புருஷோத்தமனின் படை வீரர்களை என் கைக்குள் போட்டு வைத்திருக்கிறேன்.

உக் : சபாஷ் ! போர் வந்தால்தான் என்ன? எதிரிப் படைகள் அரண்மனைக்குள் வந்த பிறகு யாரால்தான் எதிர்த்து ஜெயிக்க முடியும் ?

சேனு : எதிரிப் படை அரண்மனைக்குள் மட்டுமா வந்திருக்கிறது ?

உக் : அந்தப்புரத்திற்கே வந்துவிட்டது என்கிறாயா? இது சண்டையிட அல்ல. சரணுகதி அடைய.

சேனு : இரவு வருகிறேன்.

* * *

[சிறைச்சாலையின் தாழ்வாரம்]

காவலன் : ஏ அந்தப் பக்கம போகாதே... விஜயா...மா...
பிரசவவேதனைப் படுறாங்க...
ஆங்......அப்படியா......

(சிறைக்குள்ளே)

பத்மா: (குழந்தையிடம் குனிந்தபடி) என் செல்வத்துட் செல்வமே! தாதியர் ஆயிரம் பேர் தமிழிசை கேட்டு வைரமணித்தொட்டிலிலே உறங்கவேண்டிய நீ இப்படி வைக்கோல் நிறம்பிய கொட்டிலிலே உருண்டு கொண்டிருப்பாய் என்று நினைக்கக்கூட இல்லையே...

விஜயா; அத்தே!......

பத்மா: கண்ணே...பாண்டிய ராஜன் பெண்ணே......நீ இப்படி கஷ்டப்படவா என் மருமகளாக வந்தாய்......

விஜயா: நான் வந்த பிறகுதான் அத்தை — உங்களுக்கும் உங்கள் அன்பு மகனுக்கும் இத்தனை வேதனைகள்...... எல்லாம் இந்தப் பாவி அடியெடுத்து வைத்த பிறகு தான்........

பத்: விஜயா!... இல்லையம்மா...உன் மலரடி பட்டால் மண்ணும் பொன்னாகும்... பொன் மாடத்தை தூசி மேடாக்கியவள் நீயல்ல...அவள் வாழ்கிறாள் ஆனந் தத்தோடு......

* * *

[பூஜை அறை]

வச. சே.: திராட்சை எப்படி இருக்கிறது?

உக்; உன் விரல்பட்ட இடமெல்லாம் இனிக்கிறது.

சேனா: என் இதழின் சுவையைவிட மட்டந்தானே இந்தக் கொய்யா?

உக்: அதில் என்ன பொய்யா?

சேனா: அன்பா எத்தனை நாட்களாகின்றன இந்த ஆனந் தம அனுபவித்து?

உக்; மீண்டும் உன்னைப் பார்க்கப் போகிறேனா என்று ஏங்கித் தவித்தேன் ஏந்திழையே!

சேனா: சுவாமி!

உக்; வசந்தி!

சேனா: பிரபோ! இப்போது நாம் எங்கிருக்கிறோம்?

உக்: சொர்க்கலோகத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறோம், கண்ணே

[பூஜை அறையின் ஜன்னலுக்கு வெளியே]

**வசந்தன் :** வைத்தியா! வைத்தியா! வைத்தியா!

**மனோ :** என்ன?

**வச :** அம்மாவும், சாமியாரும் சொர்க்கலோகத்துக்குப் போய்க்கொண்டிருக்காங்க! வா! வா! போய அம்மாவைக் காப்பாத்துவோம்.

**மனோ :** நீ போய் உடனே மகாராஜாவை அழைத்துக் கொண்டுவா!

**வச :** ஆ! அதுதான் சரி... சந்தேகமில்லே! சந்தேகமில்லே.

* * *

[அரசர் அறை]

**வசந்தன் :** அப்பா! அப்பா!

**அர :** என்னடா இது?

**வச :** அம்மாவும், சாமியாரும் சொர்க்கலோகத்துக்குப் போகிறாங்களாம்!

**அர :** ஆ.........!

**வச :** வாப்பா......வா......

* *

[பூஜை அறை]

**உக் :** இத்தனை விளக்குகள் ஏன் வசந்தி?

**சேனு :** ஏன் ஒரு விளக்கு போதுமா?

**உக் :** அதுகூடத் தேவை இல்லை, அணையா விளக்கு நீ அருகே இருக்கும்போது! (அரசர் கதவை இடிக்கிறார். உக்ரசேனன் வாளை உருவுகிறான்)

**சேனு :** வேண்டாம்! காரியம் கெட்டுவிடும். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். இப்படி வாருங்கள்... (அறைக்குள் அனுப்பி கதவை மூடுகிறாள்; கதவு உடைபடுகிறது) யாரது?

**அரசர் :** யாரா?......பாதகி!

**சேனு :** ஆ! பிரபு! அடியாளைப் பார்க்கக் கூடாதே தாங்கள்? ஆண்டவன் கட்டளையாயிற்றே!

**அர :** எதடி ஆண்டவன் கட்டளை? எது? அர்த்த ராத்திரியிலே, ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் அந்த ஆண்

டிப் பயலோடு நீ ஆனந்தக் கேளிக்கை நடத்தவேண்டு மென்பதா ஆண்டவன் கட்டளை ?

சே: ஆ! கண்ணால் கண்டதும் பொய்! காதால் கேட்டதும் பொய்! தீர விசாரிப்பதுதான் மெய், மஹாராஜா!

அர: சீ! நாடகமாடாதே! எங்கே அந்த ஆண்டி?

சே: அவர் தியான லோகத்தில் இருக்கிறார்

அர: உத்யான லோகத்திலா? ஊர் கெடுக்கும் பதரே! இனியும் நீ புருஷோத்தமனை ஏமாற்ற முடியாது.

தோழி: மஹாராஜா! அமைதியாக ஆலோசனை செய்யுங்கள். அம்மாவை பழி கூறாதீர்கள். அவர்கள் உத்தமி!

அர: உத்தமிக்கு லக்ஷணம் உரைக்க வந்தவளே, உண்ட வீட்டிற்கு ரண்டகம் செய்யும் துரோக வடிவமே! உன்னால் வந்ததுதானடி இவ்வளவும். உயிர்விடப் போகிறாள்......உடனே வந்து காப்பாற்றுங்கள் என்று அலறினாய்! உத்தமர் சத்தியசீலருக்கும், பத்தினி பத்மாவதிக்கும் களங்கம் கற்பித்தாய். அப்போதெல்லாம் தெரியாதடி நீ இந்தத் திருடியின் கன்னக் கோலென்று!

தோழி: மகாராஜா!

அர: உண்மையைச் சொல், நீயும் இந்த நாசக்காரியும் எனனை ஏமாற்றி வாழ்ந்தது உண்மைதானே? சொல்லடி! சொல்!

சே: அவளை ஒன்றும் செய்யாதீர்கள். எல்லாம் நானே சொல்லுகிறேன். கணவனுக்கு விஷம் கொடுத்துக் கொன்றேன். களங்கமற்ற பத்மாவதி கற்பிழந்தாள் என்று கதை கட்டினேன்.

அர: ஆ!

சேனா: என்னடா! உண்மையெல்லாம் சொல்லுகிறாளே என்று யோசிக்கிறீரா? இதையெல்லாம் சொல்லுவது உம்மிடம் மன்னிப்பு பெற அல்ல. இனி உம்மால் என்னை ஒன்றும் செய்யமுடியாது என்ற மனோ தைரியத்தில்!

அர: மோசக்காரி!

சே; மோசக்காரி! நானா மோசக்காரி? பல ஆண்டுக ளாக என்னை பள்ளியறைப் பதுமையாக மாத்திரம் வைத்துக்கொண்டு என் பாலகனுக்கு பட்டாபிஷே கம் செய்ய வேண்டும் என்ற என் ஒரே ஒரு தணியாத ஆசையைக்கூட தரை மட்டமாக ஆக்கிவிட்ட நீரல் லவா மோசக்காரர்?

அர: உன் பாலகனுக்கு பட்டாபிஷேகம், மறந்துவிடு அதை! இந்த பூமியை புருஷோத்தமன் சந்ததியிட மிருந்து யாராலும் பறிக்க முடியாது.

சேனா: கனவு காணுகிறீர்! வாழ்த்துப் பத்திரம் தயார் செய்து வையும - வசந்தனின் மகுடாபிஷேகத்திற்கு! கேசரிவர்மனின் புதல்வன் வசந்தனின் மகுடாபி ஷேகத்திற்கு-

அர: நிறுத்தடி! நிறுத்து வேசி!

சேனா: பாவம! அது இப்போதுதான் தெரிந்ததோ?

அர: பாவி! பரதகை உன்னை உயிரோடு வைத்திருந் தால் உளறிக்கொண்டே இருப்பாய். யாரங்கே? ஓடி வாருங்கள்! இவளைப் பிடியுங்கள.

[சாவலாளிகள் அசையாமல் நிற் கிறார்கள.]

சேனா: நடக்காது, அஸ்தமித்துவிட்டது உமது அதிகா ரம். இவர்கள என் வீரர்கள்! அக்ஷயா இவனைக் கைது செய்!

அர: ஆ என்னையா கைது செய்யச் சொல்லுகிறாய்?

சேனா: ஆம்; உன்னைத்தான். கைது செய்யச் சொல்லு கிறேன். அதுவும் இந்த கடைசி ராஜ உடையுடன! அக்ஷயா! ஏன் நிற்கிறாய் அக்ஷயா? உம்............... நடக்கட்டும்.........

[தந்தையை மனோகரன் கைது செய்கிறான்]

அரசன்: (தனக்குள) புருஷோத்தமா! புறமுதுகு காட்டி யறியாத உன் பரம்பரையின புகழை மண்ணோடு மண் ணாக்கிவிட்டாய்! வாளேந்திய உன கரங்களிலே வஞ் சகி பூட்டிய விலங்கு! ஏ! வீரபூமியே! என்னை மன் னிக்கமாட்டாயா?

* *

(சிறைக்கூடம்)

மனோ: சிரமசைத்தால் சிற்றரசர்கள் கப்பமுடன் வணங்குவர் சேனைத் தளபதிகள் சீறி எழுவர். அந்த செங்கோல் சிங்கத்தின் ராஜரீகம் இன்று சிறைக்கம்பிகளுக்குள்ளடங்கி விட்டது.

அர: அட கோழைகளே! ராஜ விசுவாசமுள்ள வீரன் ஒருவன் கூட இங்கே கிடையாதா?

மனோ: இருக்கிறார்கள் அத்தனை பேரும் சிறைச்சாலையில் ரத்தச்செலவே இல்லாமல் கத்தி முழக்கம் கேட்காமல் வெற்றி முரசு கொட்டியிருக்கிறார் எங்கள் வேந்தர்.

அர: வேந்தன்! வேல் பிடிக்கத் தெரியாமல், கமண்டல மேந்தி களம் புகுந்த கபோதிக்குப் பெயர் வேந்தன்!

மனோ: அப்படியல்ல! உக்ரசேனன் புத்திசாலி! கட்டிலறையிலே இருக்கும் புருஷோத்தமரை எதிர்க்க, கணைகளோ, கேடயங்களோ தேவைப்படாதென தெரிந்திருக்கிறார். ஆகவே காவி, கமண்டலங்களே போதுமெனத் தீர்மானித்திருக்கிறார்,

அர: போதுமடா நிறுத்து. வேசி விசிய வலையிலே விழுந்துவிட்ட காரணத்தால் என் வீரம் விலை போய் விடவில்லை.

மனோ: யார் வேசி? வசந்தசேனை பத்தினி! பத்தரை மாற்று தங்கம்.

அர: இல்லை, என் பத்தரை மாற்று தங்கத்தைத்தான் பாதாள சிறையிலே போட்டேனே! பாவி! பதமாவதி! நீதான் பத்தரை மாற்று தங்கம். உனைப் பழி கூறிய பாதகனுக்கு சரியான பரிசு கிடைத்துவிட்டது. பத்மாவதி!

மனோ: வருந்திப் பயனில்லை. நாளை காலையிலே வசந்தனுக்குப் பட்டாபிஷேகம்.

அர: வசந்தன்! அந்த வஞ்சகியின் மகன் வக்ர மூளைக்காரன். வளமார் எமது பூமியின் வருங்கால காவலன் ஐயகோ! மனோகரா! ஆளப் பிறந்த என் செல்வமே! உனை சாகத்துரத்திய சண்டாளனுக்கு சரியான தண்டனை கிடைத்துவிட்டது. மனோகரா! உனக்கும் உன் மாதாவிற்கும் கண்மணி விஜயாவுக்கும் எத்தனை இடை

யூறுகள் செய்தேன்! அதற்கெல்லாம் யாரிடம் மன்னிப்பு கேட்பேன்? நீ எங்கிருக்கிறாய் மனோகரா! ஆயிரம் குற்றங்கள் செய்திருந்தாலும் தந்தைக்கு ஆபத்து என்றால் தலைகொடுக்க ஓடிவருவாயே! உன்னிடம் யார் இந்தச் செய்தியையை சொல்வார்கள் மனோகரா! மனோகரா நீ எங்கிருக்கிறாய் மனோகரா!

மனோ: இங்கே தான்!

அர: எங்கே? என் மனோகரன் எங்கே? எங்கே மனோகரன்? மனோகரா! மனோகரா!

* * *

அரண்மனை.

சேனு: அக்ஷயா! பாதாள சிறையில் கிடக்கும் விஜயா குழந்தை பெற்றிருக்கிறாளாம்.

மனோ: ஆ!

சேனு: என்ன அக்ஷயா?

மனோ: ஒன்றுமில்லை......ஒன்றுமில்லை. அழியப்போகும் நேரத்தில் அரும்பு முளைத்திருக்கிறது!

சேனு; ஆமாம். அதைத்தான் கிள்ளி எறிய வேண்டும் நீ!

மனோ: ஆ! என்ன, நானா?

சேனு: உன்னை விட யார் இருக்கிறார்கள்—இந்தக் காரியத்தை செய்ய! இந்தா! இப்பொழுதே போ!

[முத்திரை மோதிரத்தைக் கொடுக்கிறாள்]

மனோ: என செல்வத்தை நான் கொல்ல வேண்டும். இல்லை... இவளை...

[வாளை உருவுகிறான்]

மனக்குரல்: மனோகரா நில். ஆத்திரப்படாதே, அவசரத்திற்கு அடிமையாகாதே! அரண்மனை முழுதும் எதிரிகள். அன்னையோ சிறையில்—தந்தையோ தவிக்கிறார். வாளை நீட்டிப் பாய்கிறாயே...உன் வாடாமலர்களை யார் காப்பாற்றுவது? உன் வண்ணக் கிளிகளை யார் காப்பாற்றுவது?

[திரும்பி சிறைச்சாலைக்குப் போகிறான்]

[குகையருகில்உள்ள கல்தூணில் கட்டப்பட்டிருந்த உண்மை அக்ஷயன் கஷ்டப்பட்டு கயிறுகளை அறுக்கிறான்.]

* * *

அரண்மனை

வசந்தசேனு : நாளை ஆகவேண்டிய காரியத்தை ஆலோசிப்போம்.

உக்கரசேனன் : இனியும் என்ன ஆகவேண்டியது ?

சேனு : நாளை வசந்தனின் பட்டாபிஷேகம்.

உக் : நிச்சயமாக ஆனல் அதற்குள் நாடு நம் வசமானதை அறிவிக்க வேண்டும்.

சேனு : அறிவிப்பதால் எதாவது ஆபத்து ?

உக் : ஆபத்து !...யாரால்? என்னை எதிர்க்கக் கூடியவர்கள் இந்த உலகத்தில் இருக்கிருர்களா ?

சேனு : உற்சாக வெள்ளத்தில் உயிரோடு இருக்கும் மனோகரனை ! மறந்துவிடக் கூடாது.

*  *  *

சிறைச்சாலை. முத்திரை மோதிரத்தைக் காட்டி உள்ளே நுழைகிறுன் மனோகரன்.

மனோ . அம்மா

பத்மாவதி : நீ யார் !

மனோ : மனோகரன்...என்னை அனுப்பினுன் !

பத் : மனோகரன்...என் கண்மணி சுகமாக இருக்கிருனு ?

விஜயா : அத்தே ! அவர் எங்கிருக்கிருராம் ?

மனோ : சதா உங்கள் இருதயத்திலே இருக்கும் அவர் வேறு எங்கு இருப்பார்.

பத் : யாரப்பா நீ ?

மனோ : அதைப் பிறகு சொல்லுகிறேன். இப்போது நீங்கள் இருவரும் இதை விட்டு தப்பிவிடவேண்டும்.

பத் : என்ன ?

மனோ : ஆமாம்; மனோகானின் ரகசிய ஏற்பாடு. இதோ முத்திரை மோதிரம் பயமின்றி யாருடைய தடையுமின்றி வெளியேறலாம். புறப்படுங்கள்

பத் , தந்திரமாக தப்பிவிடுவது—கூடாது, முடியாது. மகாராஜாவின் உத்திரவை மீற முடியாது. மனோகானிடம் சொல்லிவிடு.

விஜ : அத்தே !

: தம்பி மனோகரனிடம் சொல்—எனக்கு ஒரு செல்லப் பேரன் பிறந்திருக்கிருன், சிறைச்சாலையில் என்று !

மனோ: இந்தப் பேரனுக்கு வரும் பேராபத்தை நீக்கத்தான் நீங்கள் வெளியேற வேண்டும் என்கிறேன்.

பந் : அரசன் கட்டளையை... அரசியே மீறுவதா? முறையல்ல.

மனோ : அப்படியானால்...ராஜகுமாரி! அந்த குழந்தையை யாவது கொடுங்கள்' நான் கொண்டுபோய்விடுகிறேன்

விஜ : ஆ ! குழந்தையா ?

மனோ : குழந்தையின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானல்...... ?

விஜ : அத்தே இவனை நம்பாதீர்கள்......குழந்தையைக் கொல்லுவதற்கு ஏதோ சூழ்ச்சி நடக்கிறது.

மனோ : இல்லை! இல்லை !......

விஜ: முடியாது...முடியாது ...நீ போய்விடு.

* * *

அரண்மனை.

சிப்பாய் : மகாராஜா! அக்ஷயன் வந்திருக்கிறார். பார்க்க வேண்டுமாம்.

வ. சே : வந்துவிட்டான்? ..இங்கே வரச்சொல்.

: வெற்றிச் செய்தியோடு வந்திருப்பான். விஜயாவின் குழந்தையைக் கொன்றுவிட்டு வந்திருப்பான் அவனுக்காக இந்தப் பரிசு

: உங்கள் தளபதி மிகவும் தந்திரசாலி.

உக்ரசேனன் : அதில் சந்தேகமென்ன? ஓ...வா... அக்ஷயா வா...

; என்ன அக்ஷயா? [உண்மை அட்சயன் வருகிறான்]

சேனு : யார் இவனு அக்ஷயன் ?

உக் ; ஆமாம்.

சேனு ; ஆ ! இல்லை.

அட்சயன் ; நான் தான் உண்மையான அக்ஷயன், உங்களை இது வரை ஏமாற்றியது போலி அக்ஷயன் அம்மணி!

: ஆமாம்...மகாராஜா! என்னைக் கட்டிப் போட்டார்கள். இப்போதுதான் தப்பி வந்தேன்.

உக் : கட்டிப் போட்டார்களா ? யார் ?

அட் ; மனோகரன் !

சேனு ; ஆ! மனோகரன் ! அப்படியானல் இங்கு இருக்கிற அக்ஷயன் ?

அட் : மனோகரன் !
உக் ; எங்கே அவன் இருக்கிறான்......
சேனு ; சிறைச்சாலைக்குத் தான் போயிருக்கிறான்.
உக் ; விடக்கூடாது.

* * *

சிறைச்சாலை

மனோ : எங்கே ! அந்தக் குழந்தையைக் கொஞ்சம் கொடுங்கள் !

; மனோகரனுடைய குழந்தைக்கு நான் ஒரு முத்தம் கூட கொடுக்கக் கூடாதா ?

விஜயா : அத்தே...நீபோகிறாயா ? இல்லையா ? சூழ்ச்சிக்காரா ?

மனோ ; இல்லை விஜயா என்னைத் தெரியவில்லையா உனக்கு [தன் பொய்த்தாடியைக் கலைக்கிறான்.] விஜயா என்னைத் தெரியவில்லை. உனக்கு......

சேனு ; பிடியுங்கள் இவனை ;

: மனோகரா !...இந்த முறையும் நீ தப்ப முடியாது.

மனோ: பார்ப்போமடி அதை...

கட்டாரியை சேனுமீது வீசக குறி வைக்கிறான்]

சேனு ; ஆ !

பத்மாவதி ; மனோகரா !...... (தடுக்கிறாள்)

[மனோகரன் சிலையாகிறான். உக்ரசேனன் கட்டாறி ஒன்றை எறிய அது மனோகரன் கையில் பாய்கிறது.]

மனோ ; நாசமாகி விட்டது ! எல்லாம் நாசமாகிவிட்டதம்மா !

சேனு ; நாசமா ?

' அதற்கும் நாள் குறித்திருக்கிறேன் மனோகரா ! அந்த மகத்தான சம்பவம் நாளைக் காலையில், ராஜ மாளிகையில் ! உன் குழந்தைக்கு மரணாபிஷேகம் !!

விஜயா : அத்தே !... அத்தே !...

பத் ; விஜயா !

மனோ ; அம்மா, அப்பா சிறையிலே பூட்டப்பட்டு விட்டார். உங்கள் ஆணையை மீறமுடியாத நான் இந்த பாதகியின்

உத்திரவுக்குப் பணிந்தேன். இந்தப் பாவியின் கரங்களால் பாதாள சிறையில் பூட்டினேன்.

சேனு; இழுத்துச் செல்லுங்கள்.

மனோ; அம்மா...உண்மையை உணர்ந்துகொண்ட தந்தை உங்களையும் என்னையும் காணத் துடிக்கிறார். இறந்து போன கொடுமைகளை எண்ணி எண்ணி கண்ணீர் வடிக்கிறார். கலங்கித் தவிக்கிறார்...கலங்கித் தவிக்கிறார் அம்மா...அம்மா...அம்மா...

பத்மாவதி; மகாராஜா உண்மையை உணர்ந்து கொண்டார்! என் மகுடபதி உண்மையை உணர்ந்து கொண்டார். உண்மையை உணர்ந்து கொண்டார்.

விஜயா; அத்தே!...என்ன அத்தே!

பத்; இருள் நீங்கிவிட்டது. இன்பம் உதயமாகிறது.

விஜ; இன்பம்...! நமக்கா?... இந்த நிலையிலா?

பத்; மகாராஜா உணர்ந்துவிட்டார் என் மகுடபதி உண்மையை உணர்ந்துவிட்டார்.

*　　*　　*

(மனோகரன் தூணில் கட்டப்பட்டிருக்கிறான்)

வசந்தசேனை: மனோகரா! உன் உடலைத்தான் எங்களால் கட்டிப் போட முடிந்தது. உயிரைக் கட்ட முடியவில்லை. அது வெகு சீக்கிரத்தில் விடுதலை பெற்று வேறு உலகத்திற்கு போய்விடும்!

மனோ: அம்மா! (உக்ரசேனன் அடிக்கிறான்)

மனோ: அம்மா!

உக்ரசேனன்: ஹும் ஐயோ பாவம் இந்த மழலைக் குழந்தை மாதாவை அழைக்கிறது.

மனோ: அம்மா!

உக்ர: பரிதாபத்துக்குரியவனே! வாய் வலிக்க தாயை ஏன் அழைக்கிறாய்? கொஞ்சம் காத்திரு! உன் பாட்டி இருக்கும் பரலோகத்திற்கே உன்னை அனுப்பி வைக்கிறேன்.

வசந்: வேண்டாம். முதலில் குழந்தை! பிறகு மனோகரன்! அவன் கண்ணுக்கு நேராகவே அவன் கண்மணியைக் கொல்லவேண்டும். உக்ரயா! போ! குழந்தையைக் கொண்டுவா;

(வசந்தன் வருகிருன்)

வசா. அண்ணு என்ன இது? உன்னே யார் கட்டிப் போட்டது?

வசந்தி: வசந்தா...

உக்ர: வா இங்கே

வச: முடியாது... எல்லாம் உன்னுடைய வேலேதாஞ! அம்மா... அண்ணனே அவிழ்த்து விடு! உம்

வசந்தி: வசந்தா... சும்மா இரு. உனக்கொன்றும் தெரியாது

வச: எனக் கெல்லாம் தெரியும். என் பிரியமுள்ள அப்பா. பெரியம்மா. அண்ணி எல்லோரையும் சிறையிலே போட்டே, அண்ணனேயும் கட்டிப் போட்டு அடிக்க ஆரம்பிச்சுட்டே. என்ஞல் இதை அனுமதிக்க முடியாது.

வச: அண்ணு!...

வசந்தி: வசந்தா!...

வச: அண்ணு!...

வசந்தி: வசந்தா வா இப்படி

வச: அண்ணு அந்த சங்கலியெல்லாம் அறுத்தெறி...... விடம்மா என்னே!

(ஒரு அறைக்குள் இழுத்து வருகிருள்)

வச: விடு என்னே...விடு என்னே.

வசந்தி; சும்மாயிரு எல்லாம் உன் நன்மைக்காகத்தான் செய்கிறேன்.

வச; ஆ! அண்ணனேக் கட்டிப் போட்டு கொல்றது தம்பியின நன்மைக்காகவா?

வசந்தி: கண்ணே நீ ராஜாவாக வேண்டாமா!

வச; ராஜாவா? வேண்டாம்! வேண்டாம். அப்புறம் உன்னுட்டம் ஒரு ராணி வந்து சிறையிலே போடுவா! செத்தாலும் சாகிறேன். அந்த சிம்மாசனம் வேண் டாம்மா?

வசந்தி; எல்லாம் என் தலேவிதி! என் வயிற்றிலே வந்து நீ பிறந்தாயே!

வச; அதுக்குத்தான் நானும் கவலேப்படுறேன்.

வசந்தி; வாயை மூடு

வச ; முடியாது.
வசந்தி ; முடியாதா?
வச ; அம்மா! அம்மா! (குதவை சாத்திப்போகிறாள்)

* * *

[சிறையில் காவலர் விஜயாவின் குழந்தையை தூக்கிவர முயற்சி]

காவலர் ; குழந்தையை கொண்டுவரும்படி உத்திரவு.
விஜ ; ஆ! அத்தே!
காவ ; உம் கொடுங்கள்.
பத்மா : இந்த சின்னஞ் சிறு சிசு என்னப்பா குற்றஞ் செய்தது? ஒரு குற்றமும் செய்யவில்லையே இந்த குழந்தை! கொடியவர் உலவும் உலகில் ஜனித்ததைத் தவிர வேறொரு குற்றமும் செய்யவில்லையே!
காவ : அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. மகாராணி உத்திரவு!
விஜ ; யாரடா! மகாராணிபோ வெளியே...என் குழந்தையைக் கேட்க நீங்கள் யார்? அந்த பாதகியிடம் சொல்-பாண்டிய நாட்டு ராஜகுமாரி தான் பெற்ற பைங்கொடியை தர மறுக்கிறாள் என்று. துணிவிருந்தால் நேருக்கு நேர் போரிட்டுப் பெற்றுக் கொள்ளச் சொல்!
பத் : விஜயா பொறுமையாய் இரு!
விஜ : அத்தே! என் குழந்தையைக் கொடுத்துவிடச் சொல்லுகிறீர்களா அத்தே! அந்தக் கொலைக்காரியிடம். குஞ்சுகளைக் கொல்ல வட்டமிடும் பருந்தை, கோழிகள்கூட எதிர்த்துப் போராடுமே! அத்தே! அவைகளைவிட தாய்மை உணர்ச்சி அற்றவளா நான்? என்னைக் கொன்றுவிடச் சொல்லுங்கள். என் உயிர் போன பிறகு. என் ஜீவ ஓவியத்தை எடுத்துக் கொண்டு போகட்டும்.

[காவலர் குழந்தையைப் பறித்தல்]

விஜ : ஐயோ அத்தே!
பத் : குழந்தையை ஒன்றும் செய்யாதீர்கள் விட்டு விடுங்கள். (காவலர் குழந்தையுடன் ஓடுதல்)

[பத்மாவதி அலறியபடி பின் தொடருதல்]

* * *

[மனோகரனின் முன்பு]

உக்ர: ஆகா! இது போன்ற ஒரு பலி கொடுத்த பிறகு வசந்தனின் பட்டாபிஷேகம் நடைபெறுவது சாஸ்திரப்படி, சாலச் சிறந்த காரியமாகும்!

வசந்தி: ஆமாம். அந்த வாய்ப்பு நமக்கு வலுவிலே கிடைத்திருக்கிறது. வசந்தன் அதிர்ஷ்டக்காரன்.

உக்ர: சோழ சாம்ராஜ்யத்தின் இளந்தென்றல் பாவம், பச்சிளங் குழந்தை. அப்பன் செய்த பாவத்திற்காக இந்த அரும்பு கசங்கப் போகிறது. மனோகரா! உன் அழகான குழந்தையின் திரு முகத்தை ஒரு முறை பார்த்துக்கொள். நீ அடக்கி வைத்திருக்கும் ஆவலையெல்லாம் உதட்டிலே தேக்கி உன் குழந்தையின் இளங் கன்னத்திலே கடைசியாக ஒரு முத்தம் கொடு. [குழந்தையை மனோகரனிடம் நீட்டி ஏமாற்றுதல்]

உம்கண்ணீரால் குளிப்பாட்டு உன் பிள்ளைக் கனியமுதை! (மனோகரன் கலக்கம்—குழந்தை எதுவுமறியாமல் புன்னகை புரிகிறது)

உக்ர: உம் சிரிக்கிறாய்—பாவம் நன்றாகச் சிரி. அழுது கொண்டு பிறந்த நீ, சிரித்துக்கொண்டு சாகிறாய். பாண்டிய ரத்தமும் சோழ ரத்தமும் அல்லவா உன் உடம்பில் பாய்ந்து ஓடுகிறது. அதனால் மகிழ்ச்சியோடு தான் மரணத்தின் தொட்டிலில் தூங்குவாய்.

வசந்: சீக்கிரம்! (உக்ரசேனன் குழந்தைமீது வாளை ஓங்குதல்)

பத்: சேனா! (அலறியபடி ஓடிவருகிறாள்) கொலை வாளை முதலில் என் மீது வீசுங்கள்

வசந்தி: அதுதான் முடியாது! மரண தேவதையின் கொடிய வாயிலே இந்த குழந்தை விழுவதை நீ கண் குளிரப் பார்க்க வேண்டும். இதற்குப் பிறகுதான் சோழ பரம்பரை சுக்கு நூறாகத் தெரித்து தூள் தூளாகச் சிதறுவதை நான் பார்த்து பரவசமடையப் போகிறேன்.

பத்மா: நிறுத்து வசந்தி, நிறுத்து! பல ஆண்டு காலம் என் பர்த்தாவை உன்னுடையவராக்கிக் கொண்டு என் வாழ்வை நிலவில்லா வானமாக்கினாய். பொறுத்

துக்கொண்டேன். சபா மண்டபத்திலே சக்ரவர்த்திக்குப் பக்கத்திலே சாம்ராஜ்ய மகாராணி போல் அமர்ந்து கொண்டாய். அதையும் பொறுத்துக் கொண்டேன். பொல்லாத மொழி பேசி கொல்லாமல் கொன்று போட்டாய் அதையுங்கூட பொறுத்துக் கொண்டேன். புலியென என் புதல்வன் சீறி எழுந்த போதெல்லாம்—உறைவிட்டு கிளம்பிய வாளை உடனே தடுத்து உன் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறேன். காரணம் என்ன ? கத்தி முனையிலே சோழ நாட்டின் சொர்ண விக்ரகத்தை நிறுத்தியிருக்கும் புத்திகெட்டவளே உன்னைத்தான் கேட்கிறேன். நான் பொறுமையாய் இருந்ததற்கு காரணம் என்ன ?

வசந்தி: அது உன் பூர்வ ஜன்ம வினை.

பத்ம: இல்லை புருஷன் மீது வைத்த அன்பு. அவருடைய பொருள் நீ. அந்த பொருளுக்குத் தீங்கு செய்து கணவருக்கு கவலை உண்டாக்கக் கூடாதென்று கருதினேன். ஆனால் இன்று நீ என் கணவரையே காராக்கிரகத்தில் அடைத்து விட்டாய். வசந்தசேனை இன்று வரை நான் காட்டிய பொறுமையின் பேரால் கேட்கிறேன். உனக்கு நாடு தானே வேண்டும். எடுத்துக் கொள். நடத்து உன் ராஜ்யத்தை! எங்களுக்கு காடு போதும். எங்கள் எல்லோரையும் விட்டுவிடு.

வசந்தி : ஆ! உங்களை விட்டுவிடுவதா ! கனவு காணாதே! சோழ சாம்ராஜ்யத்தின் சாம்பல்மேடு இன்னும் அரை நொடியில் என காலடியில் குவியப் போகிறது.

பத்மா : வசந்தசேனா ! உண்மையின் சொரூபம் புயலாக உருவெடுத்தால் அந்த சாமபல் மேட்டில் நீ அமிழ்ந்து விடுவாய் ஜாக்கிரதை !

வசந்தி : என்னையா பயமுறுத்துகிறாய் ?

பத்மா : ஆமாம் உன்னைத்தான். வான பெய்யா நாடு! மான் துள்ளும் காடு ! தேன் பொழியும் வீடு—எங்கள் சோழ மண்டலம். அங்கே காதல் கமண்டலம் ஏந்தி வந்தவளை சூழ்ச்சி பல வகுத்து சுந்தர வாழ்வை சூறையிட்டவளே வந்தவளை வரவேற்று இத்தனை நாள் இன்பமாக வாழ இடமளித்தேன் ! இன்றோ ஆள்வதற்கு நீ, மாள்வதற்கு நாங்கள் என்று ஆண

வம் பேசுகிறாய். இல்லை ! உன்னுடைய அழிவுக்கு நீயே ஆரத்தி எடுக்கிறாய். வீணே அழிந்து போகாதே!

வசந் : என்ன சொன்னாய் ?

(பத்மாவை வசந்தி அறைகிறான்)

மனோ : அம்மா !......(அலறிவிடுகிறான்)

பத்மா : மனோகரா ! (அவனிடம் போகிறாள்)

பத் : மனோகரா ! என் மங்காத புகழ்விளக்கே ! மன்னித்துவிடடா என்னை! சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையைக் காப்பாற்றுவதற்காக நீ வீறு கொண்டு எழுந்து வீர காவியம் தீட்டும்போதெல்லாம் எழுத்தாணியை மறைத்து வைத்தும், ஏடுகளை ஒளித்துவைத்தும், தடுத்து நின்ற பழிகாரி நான்தான் தாயின் ஆணையைத் தலைமேல்கொண்ட என் தங்கமே! அநீதியை அழித்துவிடு என்று உன் அன்னையே இப்போது உத்தரவிட்டாலும் அசைய முடியாத நிலை பெற்றுவிட்டாய். என் செல்வமே! அழிந்தது. எல்லாம அழிந்தது.

மனோ : இல்லையம்மா......!

இல்லை! அநீதியை அழித்துவிடு, என்று என் அன்னையே! இப்போதாவது கட்டளை இடுங்கள் ! கடைசி நேரம்! கடைசி வேண்டுகோள் ! என் தமிழ்த் தாயே! இன்பச் சோலையின் இடையே தோன்றிய சுணவாயின் வழியாக இந்தப் பூமியிலே குடியேறி நிலைபெற்றுவிட்ட குள்ளநரி, இன்று ஆட்சிபீடம் ஏறுவதற்கு அச்சாரம போட்டுவிட்ட அக்ரமத்தைக் கண்ட பிறகாவது 'அனுமதி தருவீர்களா? வாள் வேண்டாம் தாயே! 'வாய்மொழி ஒன்று போதும். படை வேண்டாம் தாயே — தாயின் தடை நீங்கினால் போதும்! கட்கம் தரவேண்டாம் தாயே — ஒரு கண் ஜாடை போதும் — உங்களுக்கும், எனக்கும் எல்லோருக்கும் விடுதலை. எங்கே தாயே உத்திரவு? உத்திரவு கொடுங்கள் உருத தெரியாமல் ஆக்குகிறேன் இவர்களை.

பத்ம : என் அருமைச் செல்வமே! உன் தந்தையின் நன்மைக்காகத்தான் உன் வீரக் கரங்களைக் கட்டிப்

போட்டேன். இந்த விஷமக்காரியின் முன்னே சிரம் தாழ்த்தி நின்றேன். யாருக்காக பொறுமை பொறுமை என்று சொல்லி வந்தேனே அவரையே சிறையில் பூட்டிவிட்ட பிறகு பொறுமைக்கு எங்கே இருக்கிறது பெருமை? மனோகரா! பொறுத்தது போதும். பொங்கியெழு!

மனோ: அம்மா!

பத்: தாயின் ஆணை கிடைத்துவிட்டது. புறப்படு! மனோகரா! மனோகரா!! மனோகரா!! மனோகரா!!!

[அரசன சிலையிடம் ஓடி]

பத்: மகாராஜா! நம்முடைய செல்வக் குடும்பம் எப்படி சீரழிகிறது பார்த்தீர்களா? கட்டுண்டு துடிக்கும் மனோகரனைப் பாருங்கள். மனோகரனைப் பாருங்கள் மகாராஜா! மகாராஜா!! மகாராஜா!!!

[உக்ரசேனன் வசந்தி சிரிப்பு]

பத்: ஏன் சிரிக்கிறீர்கள்? செவ்வாழைத் தோட்டத்திலே குதித்தாடும் குரங்குகளே! மங்கை உருவில், மகான் உருவில், இந்த மண்ணை வளைக்க வந்த மகா பாதகர்களே! இப்படி சிரித்தவர் வாழ்ந்த தில்லை. அழுதவர் கெட்டதில்லை என்று ஜெகம் சொல்லும் சரித்திரத்தை மறந்தவர்களே! செப்படி வித்தையால் செழுந் தமிழர் செங்கோலை முறிக்க வந்த சிறு நரிக் கூட்டமே! சிரிக்காதே! கண்ணீரின் வலிமையை உணர முடியாத கயவரின் கும்பலே! கண்ணீர் துளிகள் சாதித்ததை கத்தி முனையும் சாதித்ததில்லை என்பதை மறந்துவிட்டு சிரிக்காதே. நொந்துபோனவர் மத்தியிலே சந்து பொன சிந்து பாடும், துரோகிகளே சிரிக்காதீர்கள், சிரிககாதீர்கள......... தாயகத்து மண்ணே! உன் வீடகத்து திருவிளக்கு மனோகரனைப் பார்! சோழ மாதா! உன சுந்தரத் தோளிலே வெற்றி மாலை சூட்டிய வீராதி வீரன் துடி துடிக்கும கொடுமையைப் பார். அன்னியப் பகைவரின ரத்தத்தால் உன் அழகு நெற்றிக்கு திலகமிட்ட மைந்தன்....அய்யகோ! அடிமைத் தளையால் கட்டுண்டு தவிக்கும் காட்சியைப் பார். சோழ குடும்பத்தின கொலு மண்டபமே என் வெற்றியின் உருவத்தை இந்த வீணர்கள் மத்தியிலே

எவ்வளவு நேரம் தலை குனியவைக்கப் போகிறாய்? பச்சிளங் குழந்தை – பட்டத்திளவரசன்! பாராளும் மன்னவை. எத்தனை பேரையும் பழிவாங்க துடிக்கும் பாதகியைத் தாங்கி நிற்கும் பூமி மாதா! நீ நன்றியுள்ள வள என்பது உண்மையானால் மறக்குடியில் பிறந்த மாதாக்களின் கண்ணீருக்கு சக்திஉண்டென்பதுஉண மையானால் மாற்றானுக்கு மண்டியிட்டறியாத மாவீரன் மனோகரன் என் மகன் என்பது உண்மையானால் இந்த சங்கிலி பொடிப்பொடியாகட்டும், அக்ரமக்காரர்களின் சிரிப்பு அடங்கட்டும். இந்த மண்டபமே இடிந்து தூள் தூளாகட்டும். தூள் தூளாகட்டும்! தூள தூளாகட்டும்!! தூள் தூளாகட்டும்!!!

(மனோகரனின் பலத்தால் தூண் நொறுங்கி விழுகிறது அதற்குத் தாய்மைக் குரலும் உதவியாகிறது.)

உக்ர: பிடியுங்கள் அவனை! கைது செய்யுங்கள்!

வசந்தி: குத்துங்கள்! கொல்லுங்கள்.

[உக்ரசேனன் மனோகரனால் கொல்லப் படுகிறான். பாண்டியன் படையும் வரு கிறது. குழந்தை கேசரிவர்மனால் காப் பாற்றப்படுகிறது.

(வசந்தி மனோகரன்மீது வீசிய கட்டாரி வசந்தன்மீது பாய்கிறது)

வசந்தி: வசந்தா!

வசந்: அண்ணா!

மனோ: வசந்தா...! வசந்தா...! வசந்தா...!

வசந்: அண்ணா!

வசந்தன்: அண்ணா என்னை ஒரு முறை 'தம்பி' என்று அழைக்கக்கூடாதா! சொல்லு அண்ணா 'தம்பி'ன்னு!

மனோ: தம்பி!

வச: அண்ணா! இந்தப் பாவி வீசிய கட்டாரி உன் மீது பட்டிருந்தால் நீ எவ்வளவு வலியோடு கஷ்டப்படுவாய் என்பதை நான் உணருகிறேன், நீ வாழ வேண்டும அண்ணா! அண்ணா நீ தான் நாட்டை ஆளவேண்டும்! நான சாக வேண்டும்.

(வசந்தன் சாகிறான். மனோகரன் வசந் தியைக் கொல்லம் முயலும்போது.)

கேசரி: வேண்டாம் இளவரசே! அவளை என்னிடம்விட்டு விடுங்கள். அந்த நல்ல காரியத்திற்காக நான் பல நாட்கள் காத்திருந்தேன். ஒரே வீச்சில் அவள் சாகக்கூடாது. இறுதி மூச்சுவரையில். கொஞ்சம்... கொஞ்சமாக கொல்ல வேண்டும். (ஓடுகிறாள் வசந்தி)

கேசரி: எங்கே ஓடுகிறாய? ஆளப் பிறந்தவளே! அடங்க காப் பிடாரி நில்! நில்!

(சிறைக் கதவு திறக்கிறது)

அரசர்; சத்திய சீலரே! என்னை மன்னித்துவிடும். பத்மாவதி எங்கே? என் பத்மாவதி எங்கே!

சத்ய: என்னுடன் வாருங்கள்.

அரச: ராஜப் பிரியா! ராஜம் பிரியா!

[குகையில்]

கேசரி: தெரிகிறதாடி! என்னைப் பார்!

: சாகவில்லையடி கேசரி வர்மன்.

: உன்னை பழி வாங்காமல் சாவேனா? ஆணவம் பிடிந்தவளே!

வசந்தி: விட்டு விடுங்கள்! நீங்கள்...

: என் புருஷர், நான் உங்கள் மனைவியில்லையா?

கேசரி: புருஷன்?...! ஹஹஹ!

: புருஷன், மனைவி என்ற வார்த்தைக்கே புது அகராதி தயாரிப்பவளே! புழுபபோல் துடித்து மடிந்து போ! பாவி அழிந்து போ!

[வசந்தி சாகிறாள்]

[அரண்மனையில்] [எல்லோரும் இன்பம்]

அரசர்; அமமா! விஜயா!

பத்மா! என இதயராணி. என்னை மன்னித்துவிடு.

பத்மா: வா. மனோகரா!

அரசர்: மனோகரா!

மனோ: அபபா!

அர: மைந்தனே! மன்னிக்க முடியாத குற்றத்தை நான் உனக்குச் செய்திருக்கிறேன.

மனோ: அப்படியெல்லாம சொல்லாதீர்கள். அதையெல்லாம் மறந்து விடுங்கள்.

ராஜப்பிரியன்: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கடைசியில் வெற்றி, பெற்றே தீரும் மன்னர் மன்னன் வாழ்க!

# ஒப்பிட்டுப் பாருங்கள்!

—(*)—

| | | |
|---|---|---|
| பத்மாவதி | — | நமது தாயகம் |
| வசந்தசேனை | — | வந்து புகுந்த வஞ்சகம் |
| புருஷோத்தமர் | — | நாட்டின் நிலைமை |
| உக்ரசேனன் | — | சமயம் பார்த்து சுரண்டும் ஏகாதிபத்தியம் |
| மனோகரன் | — | தாயகத்தை விடுவிக்கும் இனஉணர்ச்சி |

அரசியல் — சமுதாய — பொருளாதார

கலைத்துறை ஏடு!

NEWS AGENT

# "முரசொலி"

ஆசிரியர்: மு. கருணாநிதி

(ஏப்ரல் முதல் நாள் வெளிவருகிறது)

**வார இதழ்**

**விலை இரண்டணா**

———————: விவரங்கட்கு :———————

நிர்வாகி: **முரசொலி,**

1/1, ஜக்ரியா காலனி ௨-ம் தெரு:

**சென்னை-24.**